1076

OF THE REGISTRAR
MADRAS
1914



1299

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

# சிவசுந்தர சாயாரூப சிவமகிமா

# சங்கிரகம்.

---

ாம்பிகை விலாச பிரஸ், சிதம்பரம்.

1914

Q23
N14

உ

சிவமயம்

கணபதி துணை

# சிவசுந்தர சாயாரூப சிவமகிமா சங்கிரகம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 20 JUN 1914 MADRAS.

இது

தோகைமலை

ஸ்ரீமத் சுப்பிரமணியசிவாசாரியரவர்கள்

விரும்பியபடி

ஸ்ரீவுன்றெண்டரவர்கள்

மாணுக்கருளொருவராகிய

காரைக்குடி

ராம. சொ. சொக்கலிங்கச்செட்டியாரால்

இயற்றப்பெற்று

கோத்தமங்கலம்

அரு. ராம. அரு.

சுப்பிரமணியச்செட்டியாரால்

சிதம்பரம்

ஸ்ரீ பாலாம்பிகா விலாச அச்சுக்கூட்டத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.


உ

# முகவுரை.

REGISTERED ... 1914 MADRAS

ஸ்ரீ சுப்பிரமண்ணிய சாந்நித்திய விசேஷ ஸ்தலமாகிய தேரகைமலையிலே, ஆதிசைவகுலத்திலே, பரத்துவாசகோத்திரத்திலே, காளஹஸ்தியாரென்னுந் திருக்கூட்டத்தாரிலொருவராகிய ஸ்ரீ துரைச்சாமி சிவாசாரியரின் ஜேஷ்டகுமாரரும், திருவெணும்பீச்சரமென்னும் சிவக்ஷேத்திரத்திலுள்ள ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் திருமடாலயத்தலைவருமாகிய ஸ்ரீமத் சுப்பிரமணிய சிவாசாரியரவர்கள், தமது குலமாகிய ஆதிசைவகுலத்திலே அநாதிசைவராகிய பரமசிவசாயரூப ஆலாஹலசுந்தரரே, உலகெலாம் உய்யும்பொருட்டு, மூன்று வயசு நரபாலரூபியாய் அவதரித்தருளிச் செய்தருளிய செயல்களெல்லாம், லோகோபகார அத்தியற்புத சிவச்செயல்களேயாகவும்; அறிவிலார் சிலர், அவரை நம்போலமானுடராக்கருதித் தகாதனகூறி அதிபாதகராதலைநோக்கி, ஒன்றுக்கும் பற்றாத சிறியேனையும் ஒரு பொருளாக்கொண்டு, ஸ்ரீசுந்தரமூர்த்திகளின் சொரூபமகிமை விளங்கச் சுருக்கமாக ஒரு நூல் வரைந்து விரைந்து தருக வென்று ஆஞ்ஞாபித்தார்கள். அது செய்தற்குரிய அறிவு சிறிதுமில்லேனாயினும், அவர்கள் சுந்தரமூர்த்திகள் வந்தருளிய உயர்குலத்தவராயும் அத்திருமடாலயத் தலைவராயுமிருக்கின்ற ஒற்றுமையுடன், அளவுகடந்த தெய்வத்தன்மை வாய்ந்த அன்பிற் சிறந்து, சுந்தரசொரூபத்தியான விசேஷத்தால் அச்சுந்தரப்பிரதிநிதிகளென்னவிளங்குதலால், அவ்வாஞ்ஞையை மறுத்தற்கஞ்சி அச்சுந்தராஞ்ஞையாகவே மேற்கொண்டு அத்திருவடிகளை வணங்கிச்சிறியேன் அறிவின்சிறுமைக்குத்தக்கவாறு அச்சுந்தரவள்ளல் விளக்கியமட்டில் இந்நூலுரைத்தேன். என்சிற்றறிவுமுற்றுங்குற்றமேயாகும். இதுநோக்கிப்பராமுகஞ்செய்யாது, தமது பேறறிவின் பெருமைக்குணத்தால், குற்றமுற்றும் நீக்கித்திருத்தஞ்செய்து திருவடிச்சமர்ப்பணஞ் செய்விக்கும் வண்ணம், பெரியார் திருவடிகளைச் சிரமேற்கொண்டு வணங்குகின்றேன்.

ராம. சொ. சொக்கலிங்கச்செட்டி



உ

சிவமயம்.

ஓம் கணபதயே நம:

# சிவசுந்தரசாபரூபசிவமகிமாசங்கிரகம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
வாழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்.

## பொல்லாவிநாயகர்துதி.

தவர்சொல் சிவசுந் தரசாபா ரூப
சிவமகிமா சங்கிரகஞ் செப்ப—வவரருள்செய் [ரையூர்ப்
சொல்லார்சீர்த் தொண்டத் தொகைப் பொருள்சொ
பொல்லார்தா ளென்மனமே போற்று.

## சுந்தரமூர்த்திசுவாமிகள்துதி.

பொன்பொலி செஞ்சடைப் புண்ணியன் கண்ணடிப் போதவுரு
நன்பொலி வான்வரு கென்றழைத் தாண்டவ னானிலமேன்
மன்பொலிந் துய்வுற வந்தருள் சுந்தர வள்ளலணி
மின்பொலி செஞ்சர ணன்பொலி நெஞ்சுற வேண்டுவனே.

## நூலாசிரியர்கள் துதி.

திருவருளி னருஞ்செயல்பற் பலகாட்டி யுலகிற்
சிவநெறியை விளக்கருள வந்தசிவ வருக்கத்
தருநன்மை நாயன்மார் திருச்சரித நம்பி
யவிர்சோதி கண்டுதொழு துரைத்தவுப மனியர்
பொருவில்குறு முனிநாரை நம்பியுல கெலாஅம்
பொன்மொழிகொள் சேக்கிழார் போற்றுமுமா பதியாம்
பெரியர்பதந் தொழுதவர்யாப் பவிழ்த்துணர்நூ லருளெம்
பெருமானு வலர்கோன்றாள் பேணியருள் பெறுவாம்.

சிவசுந்தர சாயாரூப சிவமகிமாசங்கிரகம் என்கின்ற இந்நூற்பெயரின்பொருள், சகலர்க்கு[illegible]ாகிய பிரமவிஷ்ணுவாதி தேவர் முதலிய சமஸ்த சீவர்களுக்கும், அவரவர் வினைக்கீடாகச் சிவாஞ்ஞையாற் கொடுக்கப்படும் மாயாசம்பந்த பிராகிருத சரீரங்கள் போலாகாமல், தமது அபின்னசத்தியாகிய உமாதேவியார் விருப்பமாத்திரையே நோக்கிச், சுவேச்சையினால் நேரிலுள்ள கண்ணாடியினின்றும், (சுந்தரா வருக) என்றழைக்கப்பெற்று, மாயாதீதமான தமது திருவருட்டிருமேனியின் அழகுமுழுதுந்திரண்டுருவாகி, நீலகண்ட திரிநேத்திர மான்மழுவாதி சாங்கோபாங்கங்களுடன், தாமே அனுக்கிரகார்த்தமாகவே வெளிவந்தருளிய சுந்தரமூர்த்திசுவாமிகளாகிய பரமசிவனுடைய அபாரமகிமாப்பிரவாகத்தின் சுருக்கம் என்பதாம்,

இதனால், பரமசிவன், தமது ரூபத்தையே கண்ணாடியினின்றும் அழைக்கப்பெற்று லோகோபகார அனுக்கிரகத்தின் பொருட்டே வெளிவந்தருளிய பரமசிவனே, ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் என்பது தெளிவாயது. ஆகவே அப்பரமசிவனை வேதசிவாகமாதி சாஸ்திரங்கள், ருத்திரநாமத்தாலும் சிற்சில இடங்களில் விளக்குதல்போலவே, சுந்தரமூர்த்திகளும் ருத்திரநாமத்தால் வழங்கப்பெறுவரென்க. இவ்வாறு வேதசிரசாகிய உபநிடதங்கள் கூறுகின்றன. இது பின் காட்டப்பெறும். இவ்வுண்மையறியார் சிலர், மூர்த்திகள் கண்ணாடியில் வந்ததைத், தாங்கள் அபத்தமாகக் கூறும் விம்பப் பிரதி விம்ப முறைபோற்கொண்டு,

மித்தையெனக்கூறி இடர்ப்பட்டுமயங்குவர். அதுபிரதிபலித்தன் மாத்திரையே அன்றி, அழைத்தல் வெளிவருதலாகிய உண்மை நிகழ்ச்சிக்கிடமின்று. இதுவோ வென்றால்? எல்லாம்வல்ல இறைவன், சுவேச்சையினாற்சீவர்களுய்யும் பொருட்டு அனுக்கிரகிக்கத் திருவுளங்கொண்டு திருவருளே திருமேனியாகச் சகளீகரித்து வருதல்போலத், திருவருளேயாகிய கண்ணாடியிலுள்ள சாயா ரூபத்தைச் (சுந்தராவருக) வென்றொருமுன்னிலைகாட்டித்தானே வெளிவந்தமையால், அவர் கூறும் மித்தியாவாதக் கோள் இங்குச் செல்லாதென்றொதுக்குவருண்மையுணர்ந்தோர். வேதசிவாகமாதிசிவசாஸ்திரப் பிரதிபாத்திய சிவமேயாகிய சுந்தரமூர்த்திகள், லோகோபகார திவ்யானுக்கிரகத்தின்பொருட்டே, மானுட வடிவுகொண்டு திருவவதாரஞ்செய்தருளிய உண்மையைஉற்று நோக்கும் பேரறிவில்லார் சிலர், மூர்த்திகளிடத்து விளங்கிய அற்புதச்செயல்கள் பற்பலவற்றையுஞ் சரித்திரமூலமாகக் கேட்டுணர்ந்தும், போகூழின் புணர்ப்பிலகப்பட்டவர்களாய் இவர் நம்மைப்போலபத்தினிகளோடு கூடிச் சிற்றின்ப நுகர்ச்சியாதி செய்தவரென்றும், சீவர்களிலொருவரென்றுங்கூறி, உய்விலாச் சிவத்துரோகிகளாய் எரிவாய் நரகுக்கிரையாகின்றார்கள். இவர்கள், பின்வருவனவற்றையேனும் நோக்கி உண்மையுணர்ந்து ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் பரமசிவமே என்பது தெளிந்து வழிபாடுசெய்துஉய்வதுநோக்கியே இந்நூல்வெளிவந்ததென்க.

ஸ்ரீசுந்தரமூர்த்திகள், திருக்கயிலாசபதியின் திருவனுக்கத் திருத்தொண்டராய்த் திருநீற்றுக்காப்பேந்துதல் திருமாலை சாத்துதலாகிய திருத்தொண்டு செய்துகொண்டு வேற்றுமையின்றி வாழ்கின்றவர். இவர் கண்ணாடியிற் றோன்றியது முதலிய இச்சரித்திரம், அகஸ்தியர் உபமந்யுவாதிய பெரியர் திருவாக்கின் விளக்கமே. வேற்றுமையின்மையை, "நந்தமாரூரனென்றுநொடித்தான் மலையுத்தமனே" என்ற மந்திரவாசக அந்தரார்த்தமு மினிது விளக்கும்.

பல்லூழி காலங்களுக்குப்பின் பாற்கடலிற் றோன்றியவிஷம் தேவர் யாவரையுந் துரத்தித், தலைமைவகித்து ஓடாது நின்ற விஷ்ணு மூர்த்தியின் வெள்ளைமேனியையும் வெதுப்பிக்கருமை

யாக்கி, அத்தேவர்களுக்கும் முன்னோடும்படிவிடாதுதுரத்திச்சென்றபோது, உயிர்க்கிறுதி குறுகப்பட்டுவந்துவேண்டிய விஷ்ணுவாதி தேவர்கட்கிரங்கிய சிவபிரான், இவ்விஷத்தைக் கிரகித்துவருக வென்று ஏவியருளச் சென்றருளிய ஸ்ரீசுந்தரமூர்த்திகள், புறத்தே வந்து தமது திருக்கரமொன்றை நீட்டியருள, அவ்விஷம் நாவற்கனியளவாய்த்திரண்டுவர, அதனை அக்கரத்தினுதியாற்பற்றிக்கொண்டு சிவசந்நிதி சென்று கொடுத்தளவே, சிவபிரான் உண்டு கண்டத்தமைத்தருளி, அவர்க்கு ஆலாஹல சுந்தரரென்று விசேஷ நாமங்கொடுத்தருளினர். அத்திருநாமமே அவர் விஷங்கிரகித்துச் சென்றதை விளக்குமாயினும், (கேஶீ விஷஸ்ய பாத்ரேண யத்ருத்ரேணாபிபத்ஸஹ) கேசி விஷஸ்ய பாத்திரேண யத்ருத்திரேணு பிபத்ஸ:, என்ற ஆரிய வேதமாகியஉபநிஷத்வசனத்தாலும் நிச்சயித்துணரலாம். இதன் பொருள்; கேசியாகிய சிவபிரான் விஷத்தை ஆலாஹல சுந்தராகிய ருத்திரரென்னும் பாத்திரத்தாற் பானித்தார் என்பதாம்.

இவ்வசனத்தின் எதார்த்தம் இதுவாயிருக்க, இதனை முன்பின்நோக்கி யுண்மை யுணரும் திண்மைப்பதியில்லாத மாற்சரிய மனமுடையார் சிலர், இதற்குமாறாகக், கேசியாகிய விஷ்ணு ருத்திரனாகிய பாத்திரத்தால் விஷத்தைப் பானித்தாரென்று கூறுவர். (அவனவ்வளவின் மகிழ்க) என்றபடி அவர் அதுசொல்லிய அவ்வளவின் மகிழட்டும். அப்பொருள் பொருந்தாது அதோகதியாதல் நோக்கிப் பின்வருந்தாதொழிக. கேசி என்றசொற்பொருள் விஷ்ணு என்பதிவர்கள் கருத்து. இருக்கட்டும். கேசத்தை யுடையானெவனோ? அவன் கேசி எனப்பெறுவன். இதுசர்வசம்மதம். விஷ்ணு கேசத்தையுடையா னென்பதற்குரிய சிறந்த இயைபு யாதுளது? மிகுந்த கேசிஎன்பர்போலும். மற்றையர்க்குக் காட்டிலுமிகுதியாதோ? அம்மிகுதியாலுள்ள சிலாக்கியந்தான் யாதோ? விரிப்பானேன். விஷங்கண்டளவே நடு நடுங்கி மிகப்பயந்தும், முன்புகடல் கடைதற்கு எத்தனித்த அவ்வளவிற்குத்தாமே வகித்துக்கொண்ட தலைமை நோக்கி வெட்குற்று, மற்றைத்தேவர்களுடனோடாது நின்று மேனிவெதும்பிக் கருகி உயிர்க்கிறுதி வந்து விட்டதென்றுளந் திகைத்துலகெலா மோடி

அத்தலைமையும் அத்தலையே ஒழிந்தமையின், ஆகூழ் வயத்தால் நல்லுணர்ச்சி கைகூடப்பெற்றுப், பசுக்களாகியநமக்குவரும் ஆபத்து நீக்கியருளுந் தலைப்பொறுப்புப், பசுபதியாகிய பரமசிவனுக்கே உரியதென்னும் உண்மை கடைப்பிடித்துக் கயிலாசஞ்சென்று அடைக்கலம் புகுந்து, எம்பெருமானே விஷத்தால் மிக வருந்துகின்றோம்; ஒருகணந் தாமதிக்கினும் உயிர்க்கிறுதி வந்துவிடும் காத்தருளுக, என்றுவேண்டி நின்ற விஷ்ணுதானே ருத்திரபாத்திரத்தால் விஷபானஞ்செய்ததலைவர்? நன்று நன்று. இது சிறுவர்க்கும் நகையாவதென்றடங்கி மௌனமுறாமல், வெட்கமுற்றுங் கைவிட்டுக் கொடிதும் பேதையுங் கொண்டதுவிடா என்றபடி இறுகப்பற்றிய பேதைமைக் குணத்தால் முழுத்தலைவரல்லார்க்கு முழுத்தலைமைகூற ஆசைப்பட்டுக் (கேசி) என்னுஞ்சொற்கு விபரீதார்த்தங்கூறித் தாங்கள் உய்விலாச்சிவத்துரோகிகளாதலுமன்றி, விஷபான விஷயத்திலுள்ள விஷ்ணுமூர்த்தியின் பரிபவத்தையும் உலகெலாமறிய வெளியாக்கி விட்ட அச்சிலர்க்கு உண்மையுணர்ந்த இனத்தவரே புத்தி கூறுவாராக. விஷ்ணு மூர்த்திக்குரிய கேசவநாமத்துணை நோக்கிக் கேசிவிஷ்ணுவென்று கூறுகின்றார் போலும். கேசவ என்னும் தொடர்மொழியை இருபதமாக்கி முன் மொழியாகிய (கே) என்பது (க) என்னுந்தாது சப்தமி விபக்தி புணரப்பெற்றுக் (கே) என நின்று அது சிரசின் கண் எனப்பொருடந்து (சவ:) என்பது பிரேதமெனப் பொருடந்து சிரசின் கண்ணே சவஞ்சுமந்தவனென்பதை விளக்குமெனவும் சுமக்கச் செய்தது தக்கன் யாகத்தில் வீரபத்திராஞ்ஞை எனவும் சித்தாந்த ரத்னகர நூலாசிரியர் கூறுகின்றாராதலால் அக்கேசவநாமத்துணையுங் கைதந்து காத்தலரிதென்க.

இனிக்கேசிஎன்னுஞ்சொல்சிவனுக்கேஉரித்தென்பதற்குரிய சிறந்த இயைபென்னெனிற் கூறுதும். மாற்சரிய குணமும், விபரீத புத்தியு முற்றுங் கைவிட்டு உற்று நோக்குவாருண்மை புணர்க. சிவபிரானுடைய கேசமானது, விஷ்ணு மூர்த்தியாதி தேவர்க்குள்ள கேசம்போலாகாமல், ஜடாரூபமாகவும், செந்நிறமாகவும் அதோமுகப் படாது மேல்நோக்கி நிற்கின்றதாகவும்

உலகெலாம் அழிக்கக்கூடிய அதிவேகப் பெரும் பிரவாகமாய்ப் பரந்துவந்த கங்கையாகிய பேராற்றை ஒரு நுனிக்கு ளடக்கிக் கொண்ட பேராற்ற லுடையதாகவும், இன்னும் எத்தனையோ மகிமைகள் வாய்ந்ததாகவு மிருத்தலால், கேசி என்னும் நிருப பதத்திருநாமம் ஈசுரநாமம் போலச் சிவனுக்கே உரியதென்னு மியைபு தெளிவாயது. இதனை வியோமகேசி, இரணியகேசி முதலியசிவநாமங்களும், கேசவநாமத்துணை போல ஊனமுற் றொழியாது தளராத்துணைகளாய் நின்றுவலி யுறுத்துமென்க.

சர்வ சக்தித்துவாதி அஷ்டமங்கள திவ்ய குணபரம பதி எவனோ! அவன், எதை நினைத்தாலும் தொடங்கினாலும் அக்காரியம் யாது மிடையூறின்றி முடிவுபெறும். முடிவுறுதொழிந்தால் அவன் பரமபதியாகானென்று சிறுவரு முணரலாம். விஷ்ணுமூர்த்தி நினைத்ததும் தொடங்கியதும் கடல் கடைந்துஅமுதமெடுத்தற்கன்றி வேறில்லை. இது அம்மத சம்மதமுமாம். நினைத்துத் தொடங்கிய அச்செயல் அவ்வாறு முடியாதொழிந்தது மன்றி மேலுமிடர் செய்ததும், பின்பு சிவாஞ்ஞை சிரமேற்கொண்டு விக்கினேசுரபூஜை செய்து தொடங்கி நிர்விக்கினமாகஅமுதம் பெற்றுக்கொண்டதும் உள்ளபடி உற்றுநோக்கும் உத்தமர்கள், சிவனுக்குப்போன்ற தலைமை, அடிமையாகிய விஷ்ணுமூர்த்திக் குண்டென்று நினைத்தலுஞ் செய்யாரென்க. இதுவுமன்றிமேற்காட்டிய உபநிஷத் வசனத்தின்படி, சுந்தரமூர்த்திகளே விஷங்கிரகித்து வந்தாரென்பதும் அதனை விஷ்ணுஉயிர்க்குவந்த ஆபத்துக்கஞ்சி யழுத முறையீட்டிற் கிரங்கியே அடிமைகளாகிய அவ்விஷ்ணு வாதியர்க் குயிர் தந்து காத்தற்பொருட்டே சிவபிரான் உண்டருளினரென்பதும் சிவதுல்லிய மகரிஷியாகிய அகத்தியவசனத்தாலும்தெளியக்காணலாம். அது (ஆகணை) ஹாஹா

ஹலவெஹாராஹஹா வதிஷுஹாஷாஹி ஜெஸநிமஹக தூ தம ஊஹம் ஷுஷுவொரஷெசீதகஜ ஹ ஹஜாஷஹஷஷ தூராஜெ

ஆகர்ணிய ஹாலாஹல வேகமாராத் உமாபதி: சுந்தரமாதிதே சநிர்கத்திய தூர்ணம் ஸசகோரமேதத்ஜக் ராகஜம் பூபலவத் கராக்கரே என்பதாம். இதன் பொருள், உமாபதியானவர், விஷ்ணுவாதிதேவர்கள் விஷவேகஞ்சகிக்கமாட்டா தலறுவதைச்

சமீபத்திற் கேட்டுச் சுந்தரமூர்த்திகளை ஏவியருளினர். அவ்வாஞ்ஞை சிரமேற்கொண்ட சுந்தரமூர்த்திகள் அத்தேவர்களிடத்து வைத்த இரக்கமிகுதியால் அதிவேகமாக விரைந்து சென்று அதிகோரமான விஷத்தைத் திருக்காத்தின் விரல் நுனியினால் நாவற்கனிபோலக் கிரகித்தார் என்பதே.

விஷ்ணுவாதி தேவர்யாவரும் சகிக்கலாற்றாது ஓடோடத்துரத்திவந்த அதிகுரூர விஷப்பிரவாகத்தை நோக்கி, ஓரணுவும் லெக்ஷியமின்றித்திருக்கரம்நீட்டியமாத்திரையே, தமது ஆஞ்ஞையால் அவ்விஷப்பிரவாகம் நாவற்கனியளவாய்த் திரண்டு காத்தில் வரச்செய்தருளிய சுந்தரமூர்த்திகளை, அவ்விஷ்ணுவாதி தேவர்யாவர்க்கும் மேலான மகாதேவராகிய பரமசிவனே என்னுமுண்மை தெளிதற்கு, இனி வேறு நூலாராய்ச்சியும் வேண்டுமோ? இத்தகைய பரமசிவ சுந்தரமூர்த்திகள் பூமியில் வந்தபின் நம்மைப்போலப் பெண்களைக்கூடிச் சிற்றின்பம் அனுபவித்தாரென்று கூறும் அறிவிலாரும் உண்மை நோக்குதற்கு இஃதொன்றே போதியது. மூர்த்திகள் பூமியில் வந்து பரவையார் சங்கிலியார் சமேதராயிருந்தாரென்று, கூறும் அவர் சரித்திரத்தைப், பூவும் மணமும்போல அபின்னர்களாகிய சிவசத்திகள், சீவர்களுய்யும் பொருட்டு ஆண் பெண்ணுருவாய் வேறுபோற்காட்டி இருவராய் நின்று செய்தருளுகின்ற திவ்ய சரித்திரங்கள் போற்கொள்வதன்றி, விபரீதமாக்கொள்வார் மீளாநரகுக்காளாவாரென்க. மூர்த்திகள் பூமியில் வந்தருளிய திவ்ய சரித்திரமூலமாகவும் மேலும் உண்மை விளக்குவாம்.

ஸ்ரீசுந்தரமூர்த்திகள் கயிலையிற் செய்கின்ற கைத்திருத்தொண்டுவந்தருளுகின்ற சிவபிரான், மூர்த்திகளது திருவாய்த்திருத்தொண்டு, லோகோபகாரமாக ஆரியவேதசாரமாகிய சீரியவேதமென்கின்ற திராவிடவேத தேவாரசுருதி வெளிவருதற்கேதுவாமெனத் திருவுளங்கொண்டருளி, அத்தொண்டும் தமது திருவாக்கின் வந்த ஆரியவேத காடின்னிய சப்த சம்ஸ்கிருத பாஷையில்வேண்டாது, இனிமையே தன்மயமாகிய தமிழ்ப்பாஷையில் நிகழ விரும்பினமையால் அப்பாஷைக்கே முக்கியமான தமிழ்த்தேசத்தில் நிகழ்தலே பொருத்தமெனக்

கொண்டு, காரணம்புணர்த்தி, மூர்த்திகளைத் தமிழ்நாட்டிற்குரியமானுடசரீரியாக்கி அனுப்பக்கருதித் திருநந்தனவனத்தில் கமலினி அநிந்திதை என்னுமிருவரை விரும்பச்செய்து, அதுவே காரணமாகக்காட்டிச் சுந்தரனே நீ மானுடசரீரியாய் பூமியிற் செல்வாயாக என்று ஆஞ்ஞாபித்தருளினர்.

இவ்வாறு காரணம் புணர்த்தாவிடில், உரிய தவஞ்செய்து கயிலையடையக்கருதும் உலகர், நாம் 'கயிலையை அடைந்தாலும் காலாந்தரத்தில் சிவாஞ்ஞையால் பூமிக்குத்திரும்பவும் நேரும் போலுமென்றெண்ணிக் கயிலாச கமனத்திற் பராமுகராவார்களென்பதையும், காரணம் புணர்த்தினால், கயிலாசத்தில் உந்நதஸ்தானத்தை யடைந்தவரானாலும், குற்றஞ்செய்தால் தண்டிக்கப்படுவார்களென்றறிந்து, உலகர்கள் குற்றத்திற்குப்பயந்து ஒதுங்கி விதிவழிநடந்து உய்வார்களென்பதையும் நோக்கியே, சுந்தரமூர்த்திகளிடத்துச் சிவபிரான் தாமே மேற்காட்டிய காரணம் புணர்த்தினாரென்க. அல்லது அத்திருநந்தனவனத்திலேயே பல்லூழிகாலமாக ஒவ்வொரு நாளுஞ்சென்று வரும்மூர்த்திகளுக்கும் அப்பெண்மணிகளுக்கும் அக்காலங்களில், ஒருபொழுதுந்தோன்றாத இச்சை, அவ்வொருதினத்தின் மாத்திரமுண்டாதற்கு வேறுகாரணமில்லையென்கின்ற ஊகத்தாலும், சிவபிரானே இச்சிக்கச்செய்தாரென்பது தெற்றெனக்காணலாம். இதனை, "அன்னவன்பெயராலாலசுந்தரன், முன்ன மாங்கொருநாண்முதல்வன்றனக், கின்னவாமெனு நாண்மலர் கொய்திடத், துன்னினானந்தனவனச் சூழலில். அந்தமில் சீரநிந்திதையாய்குழற், கந்தமாலைக்கமலினி யென்பவர், கொந்துகொண்ட திருமலர் கொய்வுழி, வந்துவானவ ரீசனருளென. மாதவஞ்செய்த தென்றிசைவாழ்ந்திடத், தீதிலாத்திருத்தொண்டத்தொகைதரப், போதுவாரவர்மேன்மனம் போக்கிடக், காதன் மாதருங் காட்சியிற் கண்ணினார்." என்ற பெரியபுராணத்திருவிருத்தங்களும், மூர்த்திகள் வானவரீசராகிய பரமசிவனருளினாலேயே, மலர்கொய்வுழிவந்து அவர்மேல் மனம்போக்கிட என்றும், அதுவும் தென்றிசைவாழவும் திருத்தொண்டத்தொகைதரவுமே என்றும், மாதரைக் கண்டவுடனே தாமே பாய்ந்தோடித் தம்மையுடை

யாரை வலிந்திழுத்துச் சென்றுபடுகுழியில் வீழ்த்தி வீழ்கின்ற ஏனையர் மனம்போலாகாமல், மூர்த்திகள், பரமசிவன் தமது வாய்த்தொண்டை விரும்புகின்ற கருத்துநோக்கி அவரருளினாலேயே தமது மனசை அம்மாதர்மேல் வற்புறுத்திப்போக்குதலால் அக்கட்டாயத்திற்கே அம்மனசு அம்மாதர்பாற் சென்றதென்றும் பொருடந்து விளக்குதலானுந் தெளியலாம். இனிப் "போக்கிட" என்கின்ற இப்பிறவினையைப் பரமசிவன்பாலேற்றினும் அமையுமென்க.

மேற்காட்டியபடி சிவாஞ்ஞை மேற்கொண்ட ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள், தெக்ஷிணபூமியிலே, தமிழ்த்தேசத்திலே, திருமுனைப்பாடிநாட்டிலே, திருநாவலூரிலே, எக்குலத்தினுஞ் சிறந்த சற்குலமென்கின்ற சிவகுலமாகிய ஆதிசைவகுலத்திலே, கௌசிககோத்திரத்திலே, ஆரூரர் சௌந்தரி என்னுந் தம்பதிகளிருவரின் மூத்தகுமாரராகிய சடையனாரும் அவர் பத்தினியார் இசைஞானியாரும் சற்புத்திரப்பேற்றை விரும்பிச்செய்துவந்த அருந்தவத்துக்கிரங்கி, அவ்விருவரும் ஒருநாள் மலரணைமேல் புத்திரப்பேறிலாமை குறித்துக்கவன்று பேசிக்கொண்டிருக்குஞ்சமயத்தில், அவ்விருவர் மத்தியில், பேரொளி விரித்து மூன்று வயசுப்பாலரூபியாய், அதிசுந்தர தேசோமய விக்கிரகதாரியாய்த் திருவவதாரஞ்செய்தருளினர். இவர் இவ்வாறு அயோனிசராய் மூன்றுவயசுப்பாலரூபியாய் வந்தருளினரென்கின்ற உண்மையைத் திருநாவலூர்ப் புராணத்தில்,

"சுத்தமுறு கௌசிககோத் திரனாரூ ரப்பெயரோன் சுருதி பாய்ந்தோன்",
உரியசவுந் தரியளித்த சடையர்சிகா மணிசூடா மணியென் றேது
மரியசுதர் மூவர்களிற் சடையனா ரெனும் பெயரோ னார்ந்த சிலனை
பிரியமுட னில்லறத்தி னியற்கைவழு வாதியற்றும் பெற்றி யாளன்
றருமகவின் மையினன்மெய், தளர்த்துசிவ னைக்கருதித் தவஞ்செய் கின்றேன்.

மனைவியிசை ஞானியொடு மணங்கமழ்மென் மலரணையில் வதிந்து நெஞ்சங்
கனிவினொடு மகப்பேறி லாமையினைக் குறித்தருகிக் கழறுங் காலைப்
பனியிருளோ டகற்றிடுவெம் பகலவன்றன் கிரணமதிற் பட்ட பைங்கூழ்
களிதழைப்ப முகில்பொழிந்த தெனவொளிர்சோ தியிருவர் நாபபனா-
[மாதோ.

ஆன்றசீர் மதியீசனி வார்முத்தி ரத்தினிசி யடர்சே வோரர்
மூன்றுவய தொடுமதலை பற்பலபூ டணமிலங்க முக்கட் டேவன்
றோன்றினனென் றுளமகிழ்ந்து சடையனார் கரத்தெடுத்துத் தோளிற்சேர்த்தார்
வான்றருமென் மலர்சொரிந்து வள்வார்துந் துமிமுழக்கு வானோ ரார்த்தார்.

என்ற செய்யுள்களானினிதுணரலாம். இதில், "முக்கட் டேவன்றோன்றினனென்றுளமகிழ்ந்து" என்ற உண்மையாலும் ஸ்ரீசுந்தரமூர்த்திகள் சிவனே என்பதை நிச்சயித்துணரலாம். இன்னுமிதனைப் பெரியபுராணத் திருவிருத்தங்களாலும் உற்று நோக்கித்தெற்றெனக்காணலாம். அப்பெரியபுராணத்தில், மூர்த்திகள் திருவவதாரங்கூறுமிடத்து, நாடு, நகரம், குலம், பிதா மாதாக்களுக்குத் தலைமைதோன்ற, இன்ன நாட்டிலே இன்ன நகரிலே இன்னகுலத்திலே இன்னாருக்கு இன்னார் கெர்ப்பத்திலிருந்து பிறந்தாரென்று இந்த முறையாக்கூறாமல், "ஆண்டவர்தமக்குநாடு" திருமுனைப்பாடி நாடு,, என்றும், " அருமறைச்சைவமோங்கவருளினாலவதரித்த வளம்பதி திருநாவலூராம்." என்றும், "சடையனாருக்கு இசைஞானியார்பால், தீதகன்றுலகமுய்யத் திருவவதாரஞ்செய்தார்." என்றும் மூர்த்திகளுக்கேதலைமை உள்ளமைகாட்டிய முறையினாலும் ஊகித்துணரலாம். இப்பெரிய புராணத் திருவிருத்தங்களையும் உற்றுநோக்குவார் நோக்குக. அவற்றுள்முதலாவது திருவிருத்தம்.

கங்கையு மதியும் பாம்புங் கடுக்கையு முடிமேல் வைத்த
வங்கண ரோலை காட்டி யாண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத மதியிரு மருங்கு மோடிச்
செங்கயல் குழைக ளாடுந் திருமுனைப் பாடி நாடு. என்பதாம்.

இதன்பொருள், கங்கை மதி பாம்பு கடுக்கைகளை முடியில் வைத்த அருட்கண்ணராகிய பரமசிவனால், அடிமையோலைகாட்டி ஆட்கொள்ளப்பெற்ற சுந்தரமூர்த்திகள், தன்னிடத்துவந்தருளுதற்குரிய அரியபெரியதவத்தைப்பல்லூழிகாலஞ்செய்துள்ள நாடு எதுவென்றால்? சலக்ஷணவதிகளாகிய சுமங்கல ஸ்திரீபுருஷர்களும் சகலவளப்பங்களும் நிறைந்துள்ள திருமுனைப்பாடி நாடாகும் என்பதாம்.

இத்திருவிருத்தத்திலுள்ள விசேஷப்பொருள்களுந் திருவருள்விளக்கிய அளவு உற்றுநோக்கிக்காண்போம். பிறரால் மாற்றமுடியாத ஜனன மரணாதிதுன்பங்களைத்தருகின்ற மலபந்தத்தாலாகிய பெருவெப்பத்தைமாற்றி, ஒரு காலத்தும் மாறாது மீளாது வீற்றிருந்து நித்தியானந்தானுபவமுற்று வாழத்தக்க திருவடிநிழலாகிய பெருந்தட்பத்தைச் சீவர்களுக்குத் தந்தருளுகின்ற மோக்ஷதாதா இவனொருவனே என்று, மறைமுழுதும் முறையிடுகின்ற பசுபதியாகிய பரமசிவனே என்பது யாவர்க்கு நன்கு விளங்கக் "கங்கை" என்னும் நன்மொழியை முன்வைத்து, அதனமேலே, எத்துணைச்சிறந்த அத்தியந்த குரூரகதியினராய் எவர்க்கு மடங்காத பேராற்றலுடையராயினும், அவர்களையுமடக்கித் தன்வசப்படுத்தி ஆளுமியல்பை, உக்கிர சசநாமங்களாலும் விளக்கும் சர்வசக்திமானவனே என்பதையும் விளக்கினார்.

இவைமுதலிய உண்மைகளை உள்ளபடி உணரவிடாது, சீவர்கள் அறிவை மறைத்து நிற்கின்ற மலவிருளைநீக்கிச், சிவஞானப்பிரகாசத்தைக்கொடுக்கின்ற ஞானதாதாவும் அவனே என்பதுவிளங்க, "மதி" என்னும் சின்மொழி பின்வைத்து, அதனமேலே, அபராதிகளாயினும், ஆபத்துமேலீட்டினலாற்றுதடைந்து துதிப்பாரை, ஆபத்து நீக்கி மேன்மைப்படுத்துகின்ற சிவகாருணியப்பெருவள்ளல் அவனே என்பதையும் விளக்கினார்.

அடைந்தாரைமாத்திரமன்றி, அடையாது கொடுஞ்செயல் மேற்கொண்டு இடர் செய்யுந்துஷ்டரையும், அட்டுத்தீர்த்துச் சிட்டராக்கி என்றுகொள்ளும் அத்தியந்த பரமதயாநிதி அப்பரமசிவனே என்பது விளங்கப், "பாம்பு" என்னுஞ்சொல்லை அடுக்கவைத்து விளக்கினார்.

சிவபிரான் துஷ்டருக்கும் அருள்செய்யுங் கிருபாளுவாகலால், நாம் எக்குற்றஞ்செய்யினும் அதை நோக்காதருள்வரென்றெண்ணிச் செய்யுங்குற்றவாளிகளிடத்து அதிகோபங்கொண்டு பெருந்தண்டனை செய்பவனும் அவனே என்பதுடனே விளங்குதற்கே, கொன்றை இதழி முதலிய வேறு பெயர்கள் பற்

பலவிருந்தும் 'அப்பெயர்களை வேண்டாது, கடுத்தலென்னும் பொருளுந்தரதக்க, "கடுக்கை" என்னுஞ்சொல்லை அடுக்கவைத்து, அப்பொருளால் அதனை முன்விளக்கிப்பின் கொன்றைப்பூமாலை என்னும் பொருளால், மேற்காட்டியன முதலிய எச்செயலும் பிறர் சகாயமின்றித்தானே செய்யவல்ல சர்வசக்தித்துவபரமகர்த்தாவாகிய பசுபதி அப்பரமசிவனே என்பதை விளக்கினர்.

கடுக்கை என்னுஞ் சொற்பொருளாகிய கொன்றைப்பூமாலை பரமகர்த்தா சிவனே என்பதை விளக்குவதெங்ஙனமெனிற் கூறுதும்; பிரணவமந்திரமானது, ஸ்ரீபஞ்சாக்ஷர அஷ்டாக்ஷராதிமந்திரங்கள் சிவவிஷ்ணுவாதி தேவர்க்குரியனவாதல்போலாகாமல், யாவர்க்கும் பொதுவாக்கொள்ளினும், அப்பொதுமை உபசாரமே; அப்பொது நீக்கித் தனதாக்கோடற் குரியதெய்வம் உள்ளபடி பிரணவார்த்த சொரூபியாகிய எமது தெய்வமே என்று சுருதிபாதித்தக்க பிரமாணத்துடன், சைவர்களாகிய நம்மவர் கூறுதல்போல, மற்றை மதஸ்தருங்கூறும் போலியுரையை மறுத்து நிதரிசனத்தில் உண்மை தேற்றுவது இக்கொன்றைப்பூவே. இது, ஏகதேசமின்றி முழுதும் பிரணவம்போலவே வளைந்துள்ள சிலகம்பிகளும், ஐந்து இதழ்களும் ஒன்று சேர்ந்த வடிவாயிருக்கின்ற நிதரிசனத்தால், ஸ்ரீபஞ்சாக்ஷர சிவமந்திரத்துக்குரியபரமசிவனே தூலசூக்குமாதி பிரணவங்களுக்குரியானென்பதனை, அக்கம்பிகளும் இதழ்களும் பிரிவில்லா ஒற்றுமை காட்டி விளக்கிப், பரமசிவனொருவனே தவிர விஷ்ணுபிர்மாதிகள், அப்பிரணவப்பொருளை வகித்தற்குரிய ஆற்றல் சிறிதுமில்லாதவர்களே என்பதனையும், சிவனே அதற்குரிய ஆற்றலுடையானென்பதனையும், அப்பூமாலை பிறரெவராலும் அவரவர்க்குரிய மாலையாக வகிக்கப்பெறாமல், சிவனொருவனே தனக்குரிய திருவடையாளமாலையாகவகிக்கப் பெறுகின்ற உண்மைகாட்டி விளக்குதலைநோக்குங்கால்; வேறுநூலாராய்ச்சி வேண்டாது சிவனொருவனே பரமகர்த்தாவாகிய பசுபதி என்பது நன்கு தெளியப்பெறும்மெங்க. விஷ்ணுபிர்மாதிகளின் திருவடையாள மாலைகள் துளசி தாமரைகளே என்பதும், அவைகள் அத்தேவர்க

ளைப் பிரணவார்த்த சொரூபிகளென்று விலக்குதற்கு எவ்வித சம்பந்தமுமில்லாதனவே என்பதும் யாவருந்தெரிந்த விஷயமே. நிற்க.

மேலும் வன்னிதும்பை மத்தமுதலியவுஞ்சடைமேல்வைத்திருக்கவும், கங்கை மதிபாம்பு கபிக்கையாகிய இந்நான்குமாத்திரமே கண்டு எடுத்தோதிபது, பசுவர்க்கத்தினராகிய ஏனைத்தேவர் முனிவர்களாற் செய்யப்பட்ட பன்னூல்களிற் கூறும் ஏனைய பன்மார்க்கங்களுநஞ் சாமானியங்களே என்றொதுக்கிப், பசுபதியாகிய பரமசிவனே செய்தருளிய முன்னூலாகிய வேதசிவாகமாதி சிவசாஸ்திரங்களிற் கூறுகின்றசரியை, கிரியை, யோகம், ஞானமென்னும், தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கங்களாகிய நன்மார்க்கங்கள் நான்குமேஅப்பரமசிவனால் மேலாகவைக்கப்பெற்ற சின்மார்க்கங்களென்கின்ற உண்மையுணர்தற்கென்க. இதனை, "தேங்கமழுமலரிதழிதிங்கள் கங்கைநிகழரவம்வளர் சடைமேற்சேரவைத்து" என்ற உமாபதி வாக்கும் விளக்கும்.

"ஒன்று நீயல்லையன்றி யொன்றில்லை" என்னும் பிரபலசுருதியின்படி, அன்றியொன்றில்லாமலெங்கும் நிறைந்து நிற்கின்ற அந்தரியாமியாயினும், மேற்கூறிய பரமகர்த்திருத்துவ சர்வைஸ்வரிய மகாப்பிரபுவாயிருந்தும், "ஒன்று நீயல்லை" என்றபடி யாதொன்றையும் பற்றாது அதீதனாய்நிற்கின்ற பற்றற்ற பரம்பொருளே அப்பரமசிவன் என்பது விளங்கச், சிரசு முடி தலை என்பனவாதிசொற்களை வேண்டாது, "சடை" என்னுஞ்சொல்லைப்பின் வைத்து விளக்கினர்.

வெப்பம் நீக்கித்தட்பந்தருதலும், அடக்கியாளுதலும், இருளைநீக்கி ஒளியைத்தருதலும், அடைந்தார்க்கு அபயங்கொடுத்தருளி மேலாகவைத்தலும், துஷ்டரையும் சிஷ்டராக்கி ஏன்றுகோடலும், அது நோக்கிப் புத்திபூர்வகமாக அக்கிரமஞ்செய்வரேல் அவரைக்கடுத்து ஒறுத்தலும், இவை முதலிய பசுபதித்துவ உத்தமகுணங்களையே, அப்பரமசிவன் மேன்மையாக்கொண்டவனென்பதும், அவனருள் வழிநிற்பாரு மிக்குணங்களையே மேற்கோடற்கதுவே ஆஞ்ஞையுமாமென்பதும் விளங்க, 'மேல்' என்னுஞ்சொல்லைப் பின்வைத்து இக்குணங்களில் யாதொன்றும்

எக்காலத்துங்கழுவுவனவல்ல, என்றும் நிலைக்குள்ளனவே என்பதுவிளங்க, வேய்ந்த, கொண்ட என்பனவாதிசொற்களை வேண்டாது "வைத்த" என்னுஞ்சொல்லைப்பின்வைத்து, இவையெல்லாம், திருவருட் பெருக்கத்தாற் செய்யப் பெறுகின்றன என்பதுவிளங்க, "அங்கணர்" என்னுஞ் சொல்லைப்பின்வைத்து விளக்கினார்.

சடைப்புனைந்த என்றாலும் போதியதாயிருக்கவும், சடைமேல்வைத்த என்று மூன்று சொற்களைத் தொடுத்துக்கூறி அங்கணரென்று அடுத்துக்கூறியது, பரமசிவன் பரிபாகசீவர்களுக்குப் பதிபசுபாசங்களாகிய முப்பொருளிலக்கணந் தெரிவித்துப் பாசநீக்கிச் சிவமாக்கி யனுக்கிரகிப்பரென்பதும், அவர்காட்டிய ஓலை இவற்றையே விளக்குஞ்சிவஞானபோதமென்பதும் முன்புறவே தெரித்தற்கென்க.

இத்தகைய அருட் கண்ணராகிய சிவபிரான், குருவடிவாய் வந்தருளித், தமது திருக்கரத்திலென்றுமுள்ள சிவஞானபோதங் காட்டியே, பரிபாகசீவர்களை ஆட்கொள்ளுமுறை இனிதுவிளங்க, "ஓலைகாட்டி" என்னுந்திருவாசகம் பின்வைத்தருளினார். அத்திருவோலைத் திருவாசகம். "அருமறை நாவலாதி சைவனூரன் செய்கை, பெருமுனி வெண்ணெயீ நல்லூர்ப் பித்தனுக்கியானுமென்பால், வருமுறை மரபுளோரும் வழித்தொண்டுசெய்தற் கோலை, யிருமையாலெழுதி நேர்ந்தேனிதற்கிவை யென்னெழுத்து" என்பதாம். இது திரிபதார்த்த நிலைமைதெரித்துப், பாசநீக்கிச் சிவமாக்கி யாட்கொண்டருளுமியல்பை இனிதுணர்த்தலாற், சிவஞானபோதமே யாமென்க. "நின்ற சிவமொன்றதனைத் தேர்தன்ஞான நிகழ்போதந் தேர்ந்ததனைத் தெளிதலாகும்" என்றபடி, மகரிஷி என்று உபநிஷதங்களால் எடுத்தோதப்பெறுகின்றவனும், வெண்ணெய்போல, மென்மை, தண்மை, மிருசுவை, குழைவுமுதலிய இன்பநலம் யாவும் நிறைந்தவனும், அநித்தியங்களான ஏனைய பல்லூர்போலாகாமல், நித்திய தத்துவாதித நல்லூர்வாசியும், அருளாதிக்கப்பெரும்பித்தனுமாகிய முதியவேதிய சிவனொருவனைப் பதியெனத்தேர்தற்கும் சபையார் முன்தெளிதற்கும், இவ்வோலைத் திருவாசகமே ஏதுவாயிருந்தமையானும், இது சிவஞானபோதமே என்பதில் எட்டுணையும் உட்டுளக்கமின்றென்க.

சுந்தரமூர்த்திகள், பிரமவிஷ்ணுவாதி சீவர்கள் யாவரை யும் அடிமைகளாக்கொண்டாளுகின்ற ஆண்டவனாகிய சிவனே என்பதினிது விளக்குதற்கே, (ஆட்கொளப்பெற்றார் நாடு) என் றிருந்தாலும் செய்யுட்கு விரோதமில்லாதிருக்கவும், அங்ஙன மின்றி "ஆண்டவர் தமக்குநாடு" என்றருளி, "தமக்கு" என் பதிலுள்ள குவ்வுருபுதகுதிப்பொருட்டாய், அந்நாடு அவ்வாண் டவர்க்குரித்தென்னுந் தகுதியை விளக்கலால், அதற்கினமா கிய மற்றெந்நாடும், எவ்வுலகும், எல்லா அண்டங்களும், பரம சிவனுக்குரித்தாதல்போல, அப்பரமசிவனேயாகிய சுந்தரமூர்த் திகளுக்குரிய உடைமைகளே என்பதும் விளக்கினர். குவ்வுருபை அது உருபாகத்திரித்து உரிமையை விளக்கின்றெனினும் பொ ருந்தும்.

இனிப், பேதையாதி வேறுபெயர் கூறாது, "மங்கையர்" என்றமையால், அச்சொல், பெண்களையுணர்த்துவதுடன் பக்கு வத்தையும்,வதனம் முகமென்றுணர்த்துவதுடன் முதன்மையை யும், மதி சந்திரனையுணர்த்துவதுடன் போதத்தையும், உண ர்த்துமாதலால், மங்கையர் வதன சீதமதி, என்பது பக்குவமுத ன்மைவாய்ந்த குளிர்ந்தபோதம் எனப்பொருடந்து, அதுபொ துவாய் நிற்றலால், சீவர்களது பரிபாக முதிர்ச்சியிலுள்ள நல் லுணர்ச்சியையும் அப்பொழுது அவர்க்கு அருளும்படிநோக் குஞ்சிவபோதத்தையும் உணர்த்துமென்க.

"இருமருங்குமோடி" என்பது காதுகளினிருபக்கத்துமோ டி என்றுணர்த்துவதுடன் சீவர்களது நல்லறிவு சிவன்பாலும். சிவபோதம் சீவர்கள்பாலும் ஓடிச்சேறலை யுணர்த்துமென்க. அ வை இரண்டும் ஆங்காங்குச் சேறலிற் காலமுன்பின் கூறற்கியை யாமையின் அச்சொற்றொடர் அதனை விளக்காது நிற்றல் காண்க. இடையீடின்றி விரைந்து ஓடுதலை யுணர்த்தற்குச் சென்று என் னாது ஓடி என்றார்.

"செங்கயல்" என்பது; இரண்டு கயல் மீன்களையுணர்த்துவது டன். கயல்போலும், குஞ்சுகள்போலும் தன்மையையுடைய சிவனையும் சீவர்களையும் உவமை ஆகுபெயராய் நின்றுணர்த்து மென்க. "குழைகணாடும்" என்பது, சிவம், குழைந்த அன்பினி டத்தை நாடும், சீவன், தன்பாலிரக்கமுற்றுக் குழைந்துவரும்

அருளினிடத்தை நாடும் என்பதை விளக்கும். வாளா, கயல் என்னாது, "செங்கயல் என்றார், சிவம் பக்ஷபாதமின்றி எக்காலத்துஞ் செப்பமாக நிற்றலையும் அப்பக்குவ சீவர்கள் பிரபஞ்சத்திற் சாயாது, ஸ்திரமாகிக் குழைந்துருகும் மெய்யன்பின்றிறத்தால் நேர்நிற்றலையுமுணர்த்தற்கென்க. ஓடி என்னும் வினையெச்சம், ஏதுப்பொருட்டாய் நாடும் என்னும் பெயரெச்ச வினையைக் கொள்ள, அது, நாடு என்னும் பெயர் கொண்டுமுடிந்தது.

இதனால், பிரமவிஷ்ணுவாதி சமஸ்தசீவர்களையும் அடிமையாக்கொண்டாளுகின்ற ஆண்டவராகிய ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு, எல்லா நாடுகளும் உலகங்களும் அண்டங்களும் உரிய உடைமைப்பொருள்களே என்பதும், அவற்றுள்ளும் லோகோபகாரமாக மூர்த்திகள் மானுடவடிவாய் வந்தருளுதற்கிடமான விசிட்டமுடையது திருமுனைப்பாடி நாடே என்பதும், அந்நாட்டிலுள்ள சீவர்கள், பக்குவ முதன்மைவாய்ந்த ஞானிகளென்பதும், அந்த ஞானம் சிவன்பால் ஓடுதலால், அச்சீவர்கள் சிவனது குழைந்த அருளின்கண்ணே நாட்டமுள்ளாரென்பதும் சிவபோதம் அவர்கள்பால் ஓடுதலால், அச்சிவன் அவர்களது அன்பின்கண்ணே நாட்டம் வைத்தருளுவரென்பதும் தெளியப்பெறும். இப்பெருமையெல்லாம், ஸ்ரீசுந்தரமூர்த்திகள் திருவவதாரஞ்செய்து வீற்றிருந்தருளிய விசேடத்தாலென்க. இவ்வுண்மையை இந்நாட்டின்பெயர்ப் பொருளும் விளக்குதல் காண்க.

திருமுனைப்பாடி என்பது இந்நாட்டின் பெயர்; இதன் பொருள், சர்வைஸ்வரியசம்பந்த ஈஸ்வரநாம பரமசிவனாகிய முதற்கடவுளைப்பாடுதலையுடையது என்பதாம். இப்பெயர், திரு முனை பாடி என்று மூன்று சொற்றொகுதி ஒருபெயராய் நிற்கின்றநிலையே, பதிபசுபாசமுப்பொருட்டொகுதியாதி பற்பல பொருள் விளக்கமுஞ்செய்யுமென்க.

"ஆண்டவர் தமக்குநாடு திருமுனைப்பாடி" என்றிருந்தாலே போதியதாயிருக்கவும், "நாடு" என்னும் ஓர் 'அருமைத் திருமொழியை மேலும் ஈற்றில் வைத்தருளிய பெருங்கருணையின் உரிமைநோக்குங்கால், சேக்கிழார்பெருமானது திருவாய்நின்றும் இத்திருப்புராணம் வெளியிட்டருளிய நடேசப்பெருமான், இக்

திருப்பாசுரத்தையும், இதுபோலவே இப்புராணத் திருவிருத்தங்களெல்லாவற்றையும், உள்ளிட்டு நாடுவாயாக என்று ஆஞ்ஞை தந்தருளியதாக் கோடற்கிடந்தருகின்றது.

இச்சிவாஞ்ஞைசிரமேற்கொண்டு ஆழ்ந்து கிடக்கும் அரும்பொருள்களை உள்ளிட்டு நோக்கி வெளியிட்டருளும், திருவருள் விலாசப்பரசிவபோதத் துரிமையராகித் தெரிசிவசீலப் பெருமக்களே, இத்திருப்பாசுரத்துட்பொருள் முற்றுந் தெற்றெனத்தோன்றப்பெற்றவை மேன்மையிற்றெனவோரு நற்றுறையார்க்கு விரித்துரைத்தருளுவர். ஒன்றுக்கும் பற்றாத அறிவிலாச்சிறியேன் உரைப்ப தெங்ஙனம். 'சிறியேனறிவுக்கவர் தந்திருபாதந்தந்த,நெறியே சிறிதியானறி நீர்மை கும்பிட்டேனன்பால்'', என்றருளி எமக்குக்காட்டியருளிய, சேக்கிழார் பெருமானாகிய கிருபாவாகீச சிவபாதகமலங்களைச் சிரமேற்கொண்டு, ஆசைமேலீட்டினால் அறியாதுரைத்தேன். பெரியார் பொறுத்தருளுக.

இத்திருவிருத்தத்தாலும், சேதனசேதனப் பிரபஞ்சமுழுதும், தனக்கு அடிமையும் உடைமையுமாக வைத்தாளுகின்ற ஆண்டவனாகிய பரமசிவனே, சுந்தரமூர்த்திகளென்பது விளக்கமாகவும், இவர், லோகோபகாரமாக மானுடவடிவினராய்ப் பூமியில் வந்தருளிய பின் சிற்றின்பம் நுகர்ந்தாரென்று கூறும் மூட வசனம், மணம்பெறு தொழிதலுமன்றி, அதி துர்நாற்றமுடைத்தாய் எங்கும் பரந்து, நன்மணமே மணக்கும் நல்லோர்களின் சின்மனநாசிகளிற் சென்றுதைத் திடர்செய்தலால், அப்பெரியார் முனிவையும், அதனாலும் மேலும் நரகவாச ஸ்திரத்தையுமே செய்யுமென்க.

## இரண்டாவது திருவிருத்தம்.

பெருகிய நலத்தான் மிக்க பெருந் திரு நாடு தன்னி
லருமறைச் சைவ மோங்க வருளினா லவத ரித்த
மருவிய தவத்தான் மிக்க வளம்பதி வாய்மை குன்றாத்
திருமறை யவர்க ணீடுந் திருநாவ லூரா மன்றே, என்பதாம்.

பதியில் அவதரித்தாரென்றது, அவதரித்த வளம்பதி என்ற இதனாலும்; மூர்த்திகளுக்கே தலைமையுரிமை விளங்குதல் காண்க. இதில் இந்நாட்டின் பெருமை விளக்குகின்ற ஆசிரியர்,

அதனுண்மை எடுத்தோதலில் தமக்குள்ள ஆசைப்பெருக்க மினிது தோன்ற, அதற்குரிய விசேஷணங்கள் ஒன்றிரண்டோ டமையாது, மிகுத்தெடுத்தோதிய உண்மையும், அச்சொற்பொருள்களின் வண்மையும் இந்நாட்டிலுள்ளார், பக்குவமுதன்மை வாய்ந்த குளிர்ந்தஞானஸ்தர்களே என்று மேற்கூறிய உட்பொளே வலியுறுத்தி, அங்ஙன மிகுத்தெடுத்தோதிய விசேஷணங்களும், "பெருகிய, நலத்தால், மிக்க, பெரும், திரு," என ஐந்தேயாகக்கூறிய முறையால், அந்த ஞானமும் ஸ்ரீபஞ்சாக்ஷர வழித்தான சிவஞானமே என்பதையு மினிது விளக்குமென்க.

"அருமறைச்சைவமோங்க வருளினலவதரித்த" என்ற அருமைத்திருவாசகங்கள், வினைக்கீடாக மாயாசம்பந்த சரீரிகளாய்ச் சீவர்கள் பிறத்தல்போலன்று, ஸ்ரீசுந்தரமூர்த்திகள், பரமசிவன் ஏவலைமேற்கொண்டு, வைதிகசைவந்தழைத்தற்கே, மானுடவடிவு கொண்டு வந்தருளினரென்று மேற்கூறியதை வலியுறுத்தி, அவ்வாசகங்களும் கூடாது குறையாது ஐந்தேயாய் நிற்றலாலும் ஸ்ரீபஞ்சாக்ஷர நெறியாகிய சைவவிளக்கஞ் செய்தற்கே வந்தருளினரென்பதை மேலும் விளக்குமென்க.

இப்பதிக்கு விசேஷணங்கூறுமிடத்து, "மருவியதவத்தால் மிக்கவளம்" என நான்குதிருவாசகங்களேகூறியது, இப்பதியிலுள்ளார்யாவரும், சரியை கிரியை யோகம் ஞானமாகிய நான்கு திருத்தொண்டுகளையே மேற்கொண்டதாச புத்திரசக சன்மார்க்கர்களே என்பதும், அத்திருத்தொண்டுகளுக்குரிய சாதகங்களாக நான்கு நிலப்பொருள்களும் நிறையப்பெற்றுள்ளதே இப்பதியென்பது மினிது விளக்குமென்க.

இப்பதியின் பெயர் கூறுங்கால், "வாய்மை, குன்றாத், திரு; மறையவர்கள் நீடு, திரு" என ஆறுதிருவாசகங்களே விசேஷணங்கூறியதுகொண்டு, அத்திருமறையவர்கள் அறுதொழிலாளரென்பதும், காமாதி ஆறு குற்றநீக்கி நன்னெறியினின்று, ஆறு குணபரமபதியாகிய சாட்குண்ணிய சிவபிரானருளைப்பெற்றவர்களென்பது மினிது காண்க. இனிப்பதப்பொருள்களேவென்றால் மிகப்பெருகும் அமைக.

## மூன்றாவது திருவிருத்தம்.

மாதொரு பாகனார்க்கு வழிவழி யடிமை செய்யும்
வேதியர் குலத்திற் றோன்றி மேம்படு சடைய னாருக்
கேதமில் கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானி யார்பாற்
றீதகன் றுலக முய்யத் திருவவ தாரஞ் செய்தார். என்பதாம்.

இதனாலும், ஏனையர்போல வினைக்கீடாகவன்று; உலகங் தீத கன்றுப்தற்காகவே, மூர்த்திகள் வந்தருளினாரென்னு முண்மை பிரகாசித்தல் காண்க. இதில், இவர் தோன்றிய குலத்திற்கு, எட்டு விசேஷணங்கூறியது கொண்டும், அஷ்டமங்கள திவ்விய குண பரமசிவகுலமாகிய சதாசிவமுகோற்பந்ந ஆதிசைவகுலமே அக்குலமென்பதும், அதினின்றும் நான்குபடி தாழ்ந்ததாகிய ஏனையபிரம முகோற்பந்ந பிராமணகுலமன் றென்பதுந் தெளியக் காண்க.

## நான்காவது திருவிருத்தம்.

தம்பிரா னருளி னாலே தவத்தினான் மிக்கார் போற்று
நம்பியாரூர ரென்றே நாமமுஞ் சாத்தி மிக்க
வைம்படை சதங்கை சாத்தி யணிமணிச் சுட்டி சாத்திச்
செம்பொனா ணரையின் மின்னத் தெருவிற்றே ருருட்டுநாளில்.
என்பதாம்.

இதில், "தவத்தினான் மிக்கார் போற்றும் நம்பி" என்ற உண்மை நோக்குங்கால், இருவினையொப்பு மலபரிபாகசத்திநிபாதத் துத்தமர்க்கே, இந் நம்பியாகிய சுந்தரமூர்த்திகளைச் சிவனே என்றுண்மை தெரிந்து போற்றும் பெரும் பாக்கியங் கைகூடுமென்பதும், மலசகிதர்களாகிய பிரம விஷ்ணுவாதிகட்கு அது கிடைப்பதரிதென்பதும், அவருள்ளும், சரியை கிரியாதி உண்மைத் திருத்தொண்டினின்று தவமிகுந்து பரிபாகமுற்றவராகில் அவர்க்கே அது கிட்டுமென்பது மினிது விளங்கும்.

"நம்பி, நம்பிரான் அருளினாலே நாமமுஞ் சாத்தி" எனக் கொண்டு கூட்டி, நம்பியாகிய ஆலாஹலசுந்தரமூர்த்திகள், இப்பூமியில் வந்த பின்னும், தம்பிரானாகிய சிவனே அருளினால், தமது திருப்பெயரும், மூர்த்திகள் இங்கு வந்ததற்கிசைய அவர் மூதாதையின் பெயருமாகிய ஆரூரரென்னும் நாமமே சாத்தப்

பெற்று, எனப்பொருள் கொள்க. இதனாலும், அருளினாலல குய்ய வந்தாரென்பதும், சீவர்கள் போல வினைக்கீடாகவந்தவ ரல்லரென்பதும், இவர் சிவனே என்பது மினிது விளங்கும்.

நாமமும் என்றதில் உம்மையானது, இறந்தது தழீஇய எச்ச உம்மையாய்த், தம்பிரான், தமதருளினாலே முன்பு கயிலையி னின்றும் பூமிக்கு வரும்படி ஏவியதுமன்றி; வந்த பின்பு நாம முஞ் சாத்தினாரென்பதையும், எதிரது தழீஇய எச்ச உம்மை யாய், இப்போது நாமகரணஞ் செய்ததன்றி, இனிமேலும் இந் நம்பியாகிய ஆரூரரிடத்து நிகழுஞ் செயல்கள் முழுதும், அத்தம்பிரான், தமதருளினாற் செய்விப்பனவே என்பதையும் அவ்வாறன்றி ஒரு சிறிதும் வேறில்லை என்பதையு மினிது விளக் குதல் காண்க.

சடையனார் இசைஞானியாராகிய பிதாமாதாக்க ளிருவரும், தங்கள் மத்தியில் மூன்று வயசு நரபாலரூபியாய் ஒளிப்பிழம்பாய் வந்தருளிய அப்பொழுதே, சற்புத்திரப்பேற்றை விரும்பி அருந் தவஞ் செய்த தம்மிடத்து வைத்த அருள் மிகுதியால், சிவனே குழந்தையாய் வந்தருளினாரென் றுள்ளபடி கருதியவாறே பாவித்துப் பாராட்டி வருகின்றார்களாதலால் உலகமுறைப்படி நாமகரணம் அவர்செய்தாரல்லர், தம்பிரானே அது செய்தா ரென்பதை, ''தம்பிரானருளினாலே'' என்னுந் திருவாசகம் ஒரு வாது நின்று விளக்குதல் காண்க. இதனை ஏகாரமுமினிது தெளி விக்கும். நம்பியாரூரரென்பதே நாமமாகக் கொண்டால், தேரு ருட்டும் என்றதற்கு வினைமுதலில்லை யாதலால், நம்பி என வேறு பிரித்து எழுவாயாகக் கோடலே திண்ணம்.

இத்திருவிருத்தங்களினுட் பொருள்க ளொவ்வொன்றும், ஆழ்ந்து நோக்குதற்குரிய அறிவு போதாமையானும், விரிந்து பெருகுமாதலானும், மேல்மூர்த்திகளது திவ்விய சரித்திரங்களி லாங்காங்குத் திருவருள் விளக்கஞ் செய்யுமவ்வளவிலாராய்வாம்.

ஸ்ரீசுந்தரமூர்த்திகள் இவ்வாறு மூன்றுவயசுப்பாலரூபியாய் வந்துவளர்ந்து பாலப்பருவங்கடந்து, சீவர்கள், மங்கையர்பால் மோகங்கொண்டு சிற்றின்ப நுகர்தற்குரிய தென்றெண்ணப்படுகி ன்ற யௌவனப்பருவத்தையடைந்தார். அதுநோக்கிய சடையனார்,

அவர்க்கு மணஞ்செயக்கருதி, மூர்த்திகளது திருவருள்நோக்காற் பரிபாகமுதிர்ந்து சிவகதிபெறுதற்குரிய அருந்தவம்புரிந்து, பூர்வமே பரிபூர்த்தியாகப் பெற்றுவந்த பெண்மணியைப் பேசி நிச்சயித்து, அதற்குரிய சடங்குகளைச்செய்ய, மூர்த்திகள் திருமணக்கோலங்கொண்டருளி, அஸ்வாரூடராய்த்திருவீதி சென்றருளும்பொழுது காணப்பெற்ற, சலட்சணவதிகளாகிய பெண்கள், கூறுதலை "கண்களெண்ணிலாத வேண்டுங்காளையைக்காண வென்பார், மண்களிகூரவந்த மணங்கண்டு வாழ்ந்தோமென்பார்." "ஆண்டகை யருளிநோக்கின் வெள்ளத்துளலைந்தோமென்பார், பூண்டபங்கிவனே காணும் புண்ணியமூர்த்தியென்பார்." என்று பெரியபுராணம் விளக்குகின்றது.

இதனால், காளைப்பருவத்தினராய்க் காணப்பெறுகின்ற இச்சுந்தரசிவத்தைக் காணவேண்டுமேல் எண்ணிலகப்படாத (ஏனையரால் மதிக்கப்படாத) ஞானக்கண்ணினாலன்றி, எண்ணிலகப்பட்ட ஊனக்கண்ணினால் முடியாதென்பதும், மணக்கின்ற தம்பதிகளாகிய தாங்களும் மாதாப்பிதாக்களும் சுற்றத்தார் முதலாயினோருமாத்திரம் களிகூரச்செய்கின்ற ஏனையர் மணம்போலாகாது, மண்ணினுள்ளார் விண்ணினுள்ளார் மற்றுமுள்ளார் யாவரும் பரமார்த்த தரிசனமெனக்கண்டு களிகூரத்தக்க சிவமணமே, இச்சுந்தரசிவ திருமணமென்பதும், இச்சுந்தரசிவநோக்கமானது காமித்தற்குரிய மணஞ்செய்யும் இக்காலத்திலும், ஏனையரது காமநோக்கம்போலாகாது, அனவரதம் திருவருணோக்கமே என்பதும், ஏனையர்களின் கர்மானுகுணசரீரங்கள்போலன்று, இச்சுந்தரசிவமூர்த்தம் புண்ணியமயமே என்பதும் தெளிவாயது.

தம்மையே விரும்பித் தம்முகமுதலியவற்றையே பார்த்துக்கொண்டு, சலட்சணவதிகளாய்ப் பல்லாயிரம் பெண்கள் காமநோக்கமேகாட்டிச்சூழ்ந்துநிற்கின்ற இந்தச்சமயத்திலுங்கூடத் தமது திருமுகமண்டலம் திருவருள் வெள்ளமே பொழிந்து யாவர்க்கும் அருணோக்கங்காட்டி நிற்குமானால்; இச்சிவசுந்தரமூர்த்திகள், பூமியில் வந்து சிற்றின்பநுகர்ந்தாரென்னு மூடவசனம் எக்கதியிற் புகுத்து மென்பது சொல்லவும் வேண்டுமோ? அமைக. அருணோக்க முதலியனவே தமக்கியல்பாயுள்ளவர், சிவசுந்தர

மூர்த்திகளென்று பெரியபுராணம் இவ்விடத்து விளக்கியதைத், திருநாவலூர்ப்புராணமும் "அருட்குரு நோக்கதன்றியனுராக நோக்கின்றென்பார், மருட்டவிர்த்துபிரைபாலும் வானவனிவனே யென்பார். "அயன்படையாததானே யமைந்த நல்லழகனென்பார்" என்று விளக்கி வலியுறுத்தல் காண்க.

இச்சுந்தரசிவ திருமணத்தில், சிவபிரான் முதியவேதியராய் வந்தருளி வல்வழக்குரைத்தனவற்றை விளக்குகின்ற பெரியபுராணத் திருவிருத்தங்களிலுள்ள 'உள்ளீடுகள்பல விரிவஞ்சியமைந்தாம். இனி மூர்த்திகளைத் தடுத்தாட்கொண்டழைத்துச்சென்று கோயிலுட்புகுந்து மறைந்தருளிய சிவபிரானை, மூர்த்திகள் அழைத்து நின்றபொழுது, சிவபிரான் ரிஷபாரூடராய் வந்தருளி மூர்த்திகளைநோக்கி, "முன்பு நீ நமக்குத்தொண்டன்முன்னிய வேட்கைகூரப், பின்பு நம்மேவலாலே பிறந்தனைமண்ணின்மீது" என்ற பெரியபுராணத் திருவிருத்தத்தால், சுந்தரனே நீமுன்பும் கயிலாசத்தில் நமக்குக்கைத்தொண்டு செய்துவந்தாய், அப்பொழுது, உனது தொண்டு பரப்பிரயோசனத்துக்கு ஏதுவாகட்டுமெனக்கருதி உன்னுடைய வாய்த்தொண்டில் நமக்கு விருப்பமுண்டாயது. அவ்வாறு நாம்முன்னிய வேட்கை அதிகப்படுதலால், நம் ஏவலினாலே பின்பு, இச்சுந்தரரூபியாய் மண்ணின்மீதுவந்தனை என்று கூறியதாகதெரிதலால், இதுகொண்டும், சுந்தரமூர்த்திகள், வினைக்கீடாகப்பிறக்கும் சீவர்களிலொருவரல்லர் சிவவர்க்கத்தவரே என்றும், இவரைப் பரமசிவன், பூமிக்கு அனுப்பியது, தமது திருவுள்ளத்தே பரப்பிரயோசனங்குறித்தெழுந்த விருப்பத்தாலேயே என்றும், மூர்த்திகள் கயிலாசத்தில், பெண்களை விரும்புதலாகிய குற்றஞ்செய்திலரென்றும், பரமசிவனே ஒருகாரணங்காட்டிப் பூமிக்கு அனுப்பவேண்டியேபெண்களை விரும்புவித்தாரென்றும் முற்கூறியனவெல்லாம் உண்மையே என்று நன்கு தெளியலாம்.

ஈண்டு எடுத்துக்காட்டிய பெரியபுராணத்திருவிருத்தத்தில், "முன்னியவேட்கை" என்றதற்கு நாம் முன்னியவேட்கை என்று பரமசிவன் கூறியதாக பொருள்கொள்ளுதல் எங்ஙனமெனில்? "பின்பு நம்மேவலாலே" என்றதும் அவ்வாறு பொருள்

கொள்ளுதலையே நிலைபெறச்செய்யுமென்க. என்னை? மூர்த்திக ளே பெண்களை முன்னியவேட்கையானல்? அது பெருங்குற்றமா கும். அக்குற்றஞ்செய்தவரவரேயானல்? அவர்சபிக்கப்படவேண் டியவரே. அப்படியானல்? பின்பு நஞ்சாபத்தாலே பிறந்தனை எ ன்றே கூறலாம். அவ்வாறின்றி "ஏவலாலே" என்ற அதிரகசிய அருமைத்திருமொழி, பரமசிவன் மூன்னியவேட்கை யென்றே விளக்குதலினலென்க. அன்றியும் தன்னடிமையை ஒருகாரியா ர்த்தமாக ஏவுகின்றதலைவன், தான்விரும்பினலன்றி ஏவுதல் கூ டாமையானும், பரமசிவன் முன்னியவேட்கையினலேயே ஏவி னரென்பது தெளிக. அதுவுமன்றி, யாதொரு குற்றமுமில்லாது இறைவன் கருத்துக்கிசைய நடக்கின்ற அடியவனை, அவ்விறை வனல் ஏவப்பெறுதற்குரிய யோக்கியதை யுடையானதலானும், மூர்த்திகளிடத்துப் பெண்விருப்பக்குற்றஞ் சிறிது மின்றென்பது நன்கு தெளியலாம்.

இவ்வாறன்றி, "முன்னியவேட்கைகூர" என்றதற்குச் சுந் தரமூர்த்திகள் பெண்களை முன்னியதனு லுண்டாகிய வேட்கை அதிகப்படுதலால் என்றுபொருள் கொள்ளுதல் பூர்வாபர விரோ தமாதலால் அது பொருந்தாதென்க. அன்றியும் மூர்த்திகள் பர மசிவ பிரேரகத்தால் பெண்களை நினைத்து விரும்பிய அப்பொ ழுதே, அந்நினைப்பை மாற்றிச் சிவஸ்மரணையுடன் பூக்கொய்து வந்தாரென்றே சரித்திரங் கூறுதலால் "முன்னிய வேட்கை" என்னது, அதிகப்படுதலாலென்று பொருள் தருகின்ற "கூர" என்ற திருமொழியை மேலும் புணர்த்தது பூர்வாபர விரோத மாகும்; சேக்கிழார்பெருமான் திருவாக்கினின்று வந்த நிட்டைச சிவவாக்கில் பூர்வாபர விரோதங் காண்டல், எவராலும் எவ்வாற் றானும் எக்காலத்தும் எட்டுணையேனு மியலாதாதலால், பரமசிவ னுக்கே மூர்த்திகளது கைத்தொண்டை முன்னிய வேட்கை அதிகப்படுதலாலென்று பொருள்கொள்ளுகின்ற நல்லெண்ணமே திண்ணமென்க.

இனிச் சிவபிரான், மூர்த்திகள், பெண்களை விரும்பிய குற் றத்தினல் அவரைப் பூமிக்கு அனுப்பினதாக வெளிக்காட்டி, யதற்கிசையச் சரித்திரமுறை கூறுமிடத்து, முன்னியவேட்கை

கூர" என்றதற்குச், சுந்தரனே நீ பெண்களை முன்னியவேட்கை கூருதலால் என்று, பெரியார் பொருள் கூறினும், பரமசிவன் முன் பின் நோக்கி உள்ளிட் டுணர்வாருணர்கெனக் கருதி, மூர்த்திகளது கைத்தொண்டை விரும்பி அதற்காகவே பூமிக்கு அனுப்புதலை வெளிக்காட்டாது மறைத்து வைத்ததுபோல், அவனருள் வழிப்பட்ட அப்பெரியாரும், திருவருளை முன்னிட்டு முன் பின் நோக்கி உள்ளிட் டுண்மையுணர்வா ருணர்கவெனக் கருதியே, அதனை வெளிக்காட்டாது, அவ்வாறு கூறினதாகவே கொள்வா ருத்தமரென்க.

இவ்வாறு பரமசிவன், நாம் உனது வாய்த்தொண்டை முன்னிய வேட்கை கூர்தலால், நம் ஏவலால் நீ பூமியில் வந்தனை என்று கூறவேண்டிய அவசியம் யாதுமில்லாதிருக்கவும், இதனை முன்னரே கூறிக் காட்டியது, உடனே அவ்வேட்கையைத் தெரிவித்து ஏதுவுங் காட்டிப்பாடுவித்தற்கேயாம். இதனை வருந் திருவிருத்தத்தாலுங் காண்க. "மற்றுநீ வன்மைபேசி வன்றொண்டனென்னுநாமம், பெற்றனை நமக்குமன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க, வற்சனைபாட்டேயாகு மாதலான் மண்மேனம்மைச், சொற்றமிழ் பாடுகென்றூர் தூமறை பாடும்வாயார்." இதில், நீ மென்மையின்றி வன்மையே பேசினும், நமக்கு இடையறாத் திருத்தொண்டனே யாமென்று தழுவிக்கொண்டதும், பரமசிவனே மூர்த்திகளது பரப்பிரயோசன வாய்த்தொண்டை விரும்பி வேட்கை கூர்ந்தாரென்பதை இனிது விளக்கும்,

மூர்த்திகள் நேரே பேசிய வன்மையும், மென்மையாய் நன்மையே பயக்குமென்று, பரமசிவனே மிகுந்த ஆதரவுடன் ஏன்று கொள்வாரானல்? மூர்த்திகளிடத்து, எப்பொழுதாவது எவ்வித்திலாவது ஒரணுத்துணைக் குற்றமாவது உளதாதலும், அது நோக்கி அவர்வர்ச்சிக்கப் பெறுதலும் உண்டென்று அறிவில்லாராவது கூறுவரா? என்பதூகித்துணர்க.

இனி நமக்கும் "அர்ச்சனை அன்பில் பெருகிய சிறப்பின்மிக்க பாட்டேயாகும்" என்பதை, பரமசிவன் முன்னரே கூறியது, மூர்த்திகள் ஆதிசைவ மரபினராய் வந்தமையால், அம்மரபிற்குரிய முக்கியமான சிவார்ச்சனையில் பிரவேசித்துவிட்டால், தாம்

முன்னியவாய்க்கிருத்திதாண்டிற்கு இடையிடுமேனுமெனக்கருதி யேயன்றிவேறில்லை. இதனை, வாளாபாட்டேபாதுமென்றாது, அன்பில்பெருமிசிறப்பின்மிக்க என்ற விசேடணங்கள் அடுக்கிமிகுத்துக்கூறிய பூசைப்பெருக்கமும், அதுஉண்மையேயெனவிளக்கும்.

அங்ஙனங்கூறிய விசேடணங்களும் நான்கேயாகக்கூறியது. மூர்த்திகள் திருவாயினின் முவ்வழிவருகின்ற தேவாரத்திருப்பாசுரமெல்லாம், சரியாதிநாற்பாதங்களை விளக்கிச் சிவர்களை அவ்வழிப்புகுத்திஉய்விக்கின்ற பரப்பிரயோசனத்தையே விளைவிப்பதென்னும் உண்மைவிளக்குதற்கே என்க.

"மண்மேல்நம்மைச்சொல்தமிழ்பாடுக" என்றது, பரமசிவன், மூர்த்திகளிடத்து விரும்பியவாய்த்திருக்கொண்டு, பாஷைகளிற் சிறந்து இனிமைபெதன்மையாகிய தமிழ் [illegible] என்றும், அதுவும் அதற்குரிய தமிழ்க்கேசமாகிய [illegible] பெடுவிருந்[illegible]ரென்றும், மேலேகூறியதைவலியுறுத்தியதுகாண்க. பரமசிவனுக்கு வேறு நாமங்கள் கூறுது, "தாமரைபதிம்[illegible]" என்று கூறியதும், எவராலும் மறக்கமுடியாத [illegible] கிய [illegible]துதிவைபதேசிரதம[illegible] பாடியநதினவராயிருந்தும், அம்மொழி[illegible]ன்னியம்மிக்கி அந்[illegible]ராமுகராய் இனிய தமிழைப்பெ[illegible]ரென்றுபடக்கத்துவேயாய்[illegible]லும்வலியுறுத்துகின்றமை[illegible]ங்க.

பரமசிவன் பாடுகவென்றருளிய[illegible] மூர்த்திகள் "கோதிலாவமுதே[illegible]பெருமானே[illegible]யான்[illegible]யறிந்து தன்சொல்லிப் பாடுகேன் எனமொ[illegible]த்தத்தின்படி, பரமசிவனை நோக்கி[illegible] ஏனையர்போலிறவாதுநீண்டகாலமிருக்கச்செய்தல் நோக்கி உபசாரமாக அமிர்தமென்று சொல்லப்பெறினும், என்றுமிறவாமையைச் செய்யமாட்டாதகோதுள்ள அமிர்தம்போலாகாது, தன்னைப் பிணைக்கின்றவர்க்குத்தன்னைப்போல[illegible] பெருவாழ்வு தந்தருளுகின்றஉண்மைஅமிர்தமொருமையாகிய எம்பெருமானை, தேவரீருடைய அபாரகுணநிச்சய மகிமைகளை? ஏனையகடல்கள் போலாகாமல், ஒவ்வொன்றும் பெருங்கடல்களாயிருக்கின்றன; அடியேனோ? நாயேன்; நீரைநாவால்நக்கியுண்பதேநாயினியல்பு;

121278

அதுஒருசிறுகுழியினீரையேனுமுற்றுமுண்பதரிது; அந்நாயனை யேனாகிய நான், தேவரீருடையகுணப்பெருங்கடலை யுண்டறிந்துரைப்பதெங்ஙனம் என்று விண்ணப்பித்தருளினார்.

சுந்தரமூர்த்திகள் பரமசிவனேயாயிருந்தும்இவ்வாறுகூறியது, தாம்சீவர்களைஉய்வித்தற்கே, சீவர்கள்போலமானுடசரீரியாய் வந்தமையால், சீவர்கள் பரதந்திரர், சிவனேசுதந்திரன்; அவன் செய்வித்தாலன்றித்தாமேசெய்யும்வலியிலரச்சீவர்என்னும் உண்மையைப், "பாட்டுவித்தாலாரொருவர்பாடாதாரே" என்ற சுருதியின்படி, பரமசிவன் பாடுவிக்கத்தாம்பாடினதாகக்காட்டிவிளக்கக்கருதியேயன்றிவேறில்லையென்க. இவ்வுண்மையே இவ்வாறு பின் வருமிடங்கடோறுங் கொள்க.

மூர்த்திகள், எதையறிந்தெதைச்சொல்லிப்பாடுவேனென்று கேட்டுக்கொண்டபின், அவர்கருத்தின்படியே, "முன்பெனைப்பித்தனென்றேமொழிந்தனையாதலாலே, யென்பெயர்பித்தனென்றே பாடுவாயென்றார்," இதனால்பரமசிவனுக்குத்தன்னைப்பித்தனென்றுகூறுதலில்மிகப்பிரியமுண்டென்பது வெளியாகின்றது, பல்லாயிரஞ்சொற்களில்வேறொன்றுங்கூறாமையாலும், நீமுன்சொன்னபடி என்னைப்பித்தனென்றுபாடுக என்றுமேலேபோதியதாயிருக்க, அவ்வாறுகூறாமல்பித்தனென்று, இருமுறைகூறியதாலும், அதனை என்பெயரென்றுங்காட்டி, அம்மட்டிலும்அமையாது, என்றேயென்று ஏனைச்சொற்களைப்பிரித்தொதுக்குகின்றபிரிநிலையேகாரமுங் காட்டிக்கூறியதாலும், முன்புமூர்த்திகள், நீபித்தனோஎன்றபொழுதும், "பித்தனுமாகபின்னும்பேயனுமாக" என்று இருமுறை தாமுங்கூறிக்கொண்டமையாலும், இன்னும்பல ஏதுக்களாலும், தன்னைப் பித்தனென்பதில் பரமசிவன் மிகப்பிரியரென்பது திண்ணமே.

மிகுபிரியம் நோக்கியே இவரின்முன்னையர்களாகிய ஸ்ரீமந் மாணிக்கவாசகராகியமூவர்களும்இவ்வருமைத்திருமொழியைத், தத்தஞ்சுருதிகளிலும் பற்பலஇடங்களில் வைத்திருக்கின்றார்கள். பித்தன்என்னுஞ்சொற்பொருள், பயித்தியகாரனென்பதாம். அளவறிந்துசெய்யத்தெரியாத பயித்தியகாரர்போலப், பரமசிவன் "குடங்கைநீரும்பச்சிலையுமிடுவார்க்கிமையாக்குஞ்சரமும், படங்கொள்பாயும்பூவணையுந்தருவாய்மதுரைப்பரமேட்டி" என்றுபெ

ரியார் கூறியபடி, ஒருஉள்ளங்கையளவினதாகியநீரும் ஒருபச்சிலையுந்தனக்குபயோகித்தவர்க்கு, அதற்குத்தக்கஅளவினதாகிய பலனைக்கொடுத்தலே அளவறிந்துசெய்யுமுறைமையாயிருக்க, அவ்வாறன்றி இந்திரபதவிபிரமபதவிவிஷ்ணுபதவிமுதலியபெரும்பதவிகளைக்கொடுக்கின்றபாயித்தியக்குணமுள்ளாரென்பதை, இப்பித்தனென்னுஞ்சொல்லேதெளியவிளக்கி, அவரது அளவுகடந்தகொடைப்பெருக்கத்தைப்பிரகாசப்படுத்தலால், ஏனையசிவசங்கராதிநாமங்களைக்காட்டிலும், என்பெயர் பித்தனென்றேபாடுவாயென்றுதாமேகூறிக்கொண்ட இத்திவ்யசிவநாமத்தில்மிகப்பிரியரென்பதுதெளியப்பெறும். இச்சிவநாமத்தைச்சுருதியும் எடுத்துவிளக்குமென்க. இத்துணைப்பெருஞ்சிறப்புநோக்கியே, சுந்தரமூர்த்திகள், இச்சொல்லைத், தமதுசரித்திரமுறையேபற்றிவெளியிட்டுநோக்குவார், அதற்கிசையமுதியவேதியரைத் தாம்கோபித்துப்பித்தனென்றிழித்துக்கூறியதாகக்கொள்ளும்படியும், உள்ளிட்டுநோக்குவார், மேற்கூறியஉண்மைப்பொருளைகொள்ளும்படியும் திருவுளங்கொண்டே, தாம் சிவர்கள்போல மநுடவடிவினராய் நிற்கின்றநிலைமைக்கிசையக்கூறினதன்றிவேறில்லையென்க. இவ்வுண்மையைஇனிஇவர், நீதிச்சபைகளில்வழக்குப்பேசிக்கைவந்தவரெனவும், பழையசிற்சபையிலாடுகின்றவரெனவும், வெளியிட்டும், உள்ளிட்டும்பொருள்கொள்வார்கொள்ளும்படி, "பழையமன்றாடிபோலும்" என்றுபின்கூறுதலாலுந்தெளியலாம். சரித்திரமுழுதுமே இப்படியேமூர்த்திகள்செயலெல்லாம் உள்ளிட்டு நோக்கியே உண்மையுணர்க.

சுந்தரமூர்த்திகளது திருவாய்த்தொண்டைப்பரமசிவன் விரும்பியது, அத்திருவாயினின்றும்வெளிவருகின்றதிராவிடவேதமாகியதேவாரச்சுருதியை உலகெலாம் நோக்கிஅவ்வழிநின்றுய்தலாகியபரப்பிரயோஜனத்தின்பொருட்டேஎன்றுமேற்கூறியதை, "எல்லாவுலகுய்ய, பல்லாறுலகினினம்புகழ்பாடென்றுபுரமெய்தானருள்செய்தான்" என்றுபரமசிவன், மூர்த்திகள்முதலில்திருப்பதிகம் பாடின உடனே அவரைநோக்கிக்கூறியதைவிளக்குகின்றபெரியபுராணத்திருவிருத்தத்தாலுமினிதுகாண்க. இவ்வாறுசிவாஞ்ஞைசிரமேற்கொண்டருளியமூர்த்திகள், திருவெண்ணைநல்லூர்முதலாய சிவஸ்தலங்கடோறுஞ்சென்று தேவாரம்பாடிச்சிதம்பரதெரிச

னஞ்செய்துகொண்டுநிற்கும்பொழுது, திருவாரூர்வீதிவிடங்கத்தியாகராசப்பெருமான், "தாளமேறிபுனல்மறிதிரைப்பொன்னி, மடுத்தநீள்வண்ணப்பண்ணையாரூரில் வருகநம்பாலென," ஆஞ்ஞாபித்தருளினர். இதில்திருவாரூருக்கு, அடுக்கிமிகுத்துக்கூறிய விசேஷணப்பொலிவினுட்பொருள்கள்பற்பலவாய் விரியும் நிற்க. அவ்விசேஷணங்களும், பிரவாகமாறுதகாவிரிநதியை விளக்கிப்பத்துச்சொற்களாலமைந்துநிற்றலை நோக்கில், ஏனையதேவமானுடராஜாக்களுக்குரியனவாய், இடையிலாவது ஆயுள்முடிவிலாவது, அழிந்தொழிகின்றதசாங்கம்போலாகாது, தம்மைப்போலவே என்றுநித்தியங்களாய்விளங்குகின்றதசாங்கங்களையுடைய ராஜாதிராஜமகாராஜவீதிவிடங்கத்தியாகராஜப்பெருமான், ஜெகமெல்லாந்திருவருட்செங்கோல்செல்லக் கொலுவீற்றிருந்தருளுகின்ற பெருஞ்சிறப்புவாய்ந்த சிவராஜதானியாகும் இத்திருவாரூரென்பதினிதுவிளங்கும்.

சிவாஞ்ஞைசிரமேற்கொண்டு மூர்த்திகள் திருவாரூருக்குவரும்போது, பரமசிவன், முன், வருகவென்று ஆஞ்ஞாபித்தஅம்மட்டிலமையாது, ஆராதகாதலினால், அத்திருவாரூரிலுள்ளார்யாவருக்கும், நம்ஆரூரனைவன்நமதுஆராதகாதலினால்நாமேபோய்த்திருவாரூருக்குவரவேண்டுமென்றழைத்ததுநோக்கி, அவனும்ஆராதகாதலுடன்வருகின்றான், நீங்கள்யாவரும்நம்மைப்போலமிகமகிழ்ந்தெதிர்கொள்ளுங்களென்று ஆஞ்ஞாபித்தருளினர். "தேராரு நெடுவீதித் திருவாரூர்வாழ்வாருக், காராதகாதலினம்மாரூரனமழைக்க, வாராநின்றானவனைமகிழ்ந்தெதிர்கொள்வீரென்று, நீராருஞ்சடைமுடிமேனிலவணிந்தாரருள்செய்தார்," என்றதிருவிருத்தமினிதுவிளக்கும். இதில் ஆராதகாதல் என்பது இரண்டிடத்துங் கொள்க. நாமேவலியச் சென்றழைக்கக்கூடிய அத்துணைச்சிறப்புடையவனே அவனென்பதை, "நம் ஆரூரன்" என்ற திருமொழி நன்குவிளக்குதல்காண்க. இதனாலுமிவர் சிவவர்க்கத்தவரே என்பது தெளிவாயது.

சிவாஞ்ஞையின்படியே திருவாரூர்வாழ்வார்யாவரும், அந்நகரில்அளவில்லாதஅலங்காரஞ்செய்து, மூர்த்திகளைச்சிவனேயெனத்துணிந்தெதிர்கொண்டுவணங்கித் துதித்தழைக்கவந்தருளிச்சந்நிதிசென்று தேவாரம் பாடும்பொழுது; தியாகராசப்பெருமான்,

"தோழமைபாகவுனக்குநம்மைத்தந்தனம்" என்று அருளிச்செய்ய, "அன்றுமுதலடியார்களெல்லாந் தம்பிரான்றோழரென்றேயறைந்தார்" என்றுபெரியபுராணம்விளக்குகின்றது. இதனாலும் மூர்த்திகள், சீவவர்க்கத்தினரல்லர்சிவவர்க்கத்தவரேஎன்பது தெளிவாமென்க. என்னை? பிரமவிஷ்ணுவாதியாவருஞ்சீவர்களே. சீவரெல்லாம்தம்பிரானடிமைகளே. மூர்த்திகள்அச்சீவரிலொருவரானால்; அவ்வாறேதம்பிரானடிமைஎன்று சொல்லப்பெறுவர். அங்ஙனமாகாது சிவவர்க்கத்தவராயிருத்தல்நோக்கியே, தியாகராசப்பெருமான், "நம்மையுனக்குத்தோழமைபாகத்தந்தனம்." என்றருளியவாறு தம்பிரான்றோழரென்றுவழங்கப்பெறுதலாலென்க.

ஆனால், குபேரனைத்தோழனென்றுகூறுதலெங்ஙனமெனில்? அவன், இதற்கெனத்தவஞ்செய்துவேண்டிக்கொண்டதற்கிரங்கி, வேண்டுவார்வேண்டுவதேயீயுங் கிருபாவள்ளலாகிய பரமசிவன், அவனுக்குப்பெருஞ்செல்வமுங்கொடுத்து, அது சாமானியமாயினும் அந்தஐஸ்வரியசம்பந்தமும் நோக்கி, உபசாரமாகத்தோழனென்றதன்றி, மூர்த்திகளைத்தாமேஆராதகாதலினால்வலிந்தழைத்து, ஊரார்க்கும்மகிழ்ந்தெதிர்கொள்ளும்படிஆஞ்ஞைசெய்து, அவர்சந்நிதியில்வந்தவுடனே எல்லையில்லாத ஆவலுடன்தாமாகவேவலிய, நம்மை உனக்குத்தோழமைபாகச் சுத்தக்கிரயஞ்செய்துதந்துவிட்டோமென்றதுபோல உண்மையாகக் கூறியதன்றென்க. இப்படியேபரமசிவன்மூர்த்திகளிடத்துச்செய்யும், ஒவ்வொருசெயலும்,உற்றுநோக்குமிடத்துப், பரமசிவனுக்கு, இவரது,வாய்த்திருத்தொண்டில்அத்தியந்தவிருப்பமுண்டென்பதும், அதுபற்றியே இவரைத்தாமேகாரணம் புணர்த்திப்பூமிக்கனுப்பினாரென்பதும் தெற்றெனவிளக்கமாகி, "முன்னியவேட்கைகூர" என்றதற்குப், பரமசிவன், இவரதுவாய்த்தொண்டு பரப்பிரயோசனமாகக் கருதியஆசையதிகரித்தலால், என்றுமுற்கூறியபொருளை வலியுறுத்திவிளக்குமென்க.

முன்கயிலாசத்தில்உமாதேவியார்ஆஞ்ஞைசிரமேற்கொண்டகமலினியார், இத்திருவாரூரில், உருத்திரகணிகையர் குலத்திலே தம்மைப்புத்திரியாராகப்பெறுதற்குரிய அருந்தவம்புரிந்துவருகின்றசவிஎன்னும்பெயருடையபெண்மணிக்குப்புத்திரியாகவந்தவதரித்தருளினார். இக்குலத்தைப்பதியிலார்குலமென்ப. இதன்பொ

ருள், இக்குலப்பெண்கள் பிறப்பிறப்பில்லாதபராபரபதியாகியபரமசி வனையேதமக்குநாயகனைக்கொண்டவர்களேயன்றி, ஏனைப்பெண் களுக்குரிய நாயகர்களாகிய பிறப்பிறப்புட்பட்டபதிகள்போன்றப தியில்லாரென்பதேயாம். இதனை, இக்குலம் வாளாகணிகையர்குல மென்னுது உருத்திரகணிகையர்குலமென்றே கூறப்பெறுதலானுந் தெளியலாம். இக்கமலினியாரும்அயோனிசராகவே வந்தவதரித் தருளினரென்பதைச், சிவனையேபதியாக்கொண்ட இக்குலமேநன் குவிளக்கும். இவ்வாறுஅவதரித்தருளியஇவர்க்குச், சிவநூல்வியர் களாகியபெரியோர்கள். சிவனுக்குரிய அதிமுக்கிய பரிசுத்தசுபதி னமாகிய திருவாதிரைநக்ஷத்திரதினத்திலே, பரவையார் என்று நாமகரணஞ்செய்தார்கள். இதனை, "பரவையாரென்னுநாமம், விதி யுளிவிளக்கத்தாலேமேதகுசான்றோரான்ற, மதியணிபுனிதனன் ஞண்மங்கலவணியார்சாத்தி" என்ற திருவிருத்தத்தாற் காண்க. முன்மூர்த்திகள்சிவனாலேயேநாமகரணஞ்செய்யப்பெற்றதுபோல வே, இவரும்சிவநூல்வியர்களாலேநாமகரணஞ்செய்யப்பெற்றதாம் இவர்மகிமையைவிளக்கும். இவர், மானுடவடிவினராய்ப் பூமியில் வந்தபின்னும், சிவசம்பந்தமேபெற்றுநிற்றலானும் இவர்சிவசக்தி வர்க்கத்தவரேஎன்பதுதெளியப்பெறும். இவர், பூமியில்வந்தபின் னும் பூர்வவுணர்ச்சியுடன்கயிலையிற்போலவேயாதொரு விகாரமு மின்றியிருந்தாரன்றி, எவ்விதவிகாரமும்உற்றாரல்லர். இதனை "உள் ளமெய்த்தன்மைமுன்னைப்புண்மையுக்தோன்றவுய்ப்பார்." என்றதி ருவிருத்தத்தானுந்தெளியலாம்.

இவரையும், மூர்த்திகளையும், கயிலாசத்தில் ஒருவரைஒருவர் நினைக்கச்செய்து, அதுவேவெளிப்படுகாரணமாகக்காட்டிப், பூமிக் கனுப்பியபரமசிவனே, இப்பொழுதும்அவ்வாறுநினைப்பித்து, அவ் விருவருக்கும் உலகறியவிவாகஞ்செய்துவைக்கும்படி திருத்தொ ண்டரனைவருக்கும் ஆஞ்ஞாபித்து அவ்வாறு செய்வித்தருளினர். இதனை, "என்றின்னனவேபலவும்புகலுமிருளாரளகச்சுருளோதி யையும், வன்றொண்டரையும் படிமேல்வரமுன்பருள்வானருளும் வகையார்நினைவார், சென்றும்பர்களுஞ்பணியுஞ்செல்வத் திருவா ரூர்வாழ்பெருமானடிகளன்றங்கவர்மன்றலைநீர்செயுமென்றடியார றியுமபடியாலருளி." என்ற திருவிருத்தத்தாற்காண்க. இதில் "படி மேல்வர முன்பருள்வானருளும்வகையார்நினைவார்." என்றதினுட்

பொருள்களைத், திருவுருவை முன்னிட்டு உற்றுநோக்கும்உத்தமசீலர்க்கு, மூர்த்திகளைப்,பரமசிவனே, வெளிப்படுகாரணங்காட்டிப்பூமிக்கனுப்பினரென்பதும், அது பரப்பிரயோசனத்தின்பொருட்டேஎன்பதும், இவர்சிவவர்க்கத்தவரேஎன்பதும், வினைக்கீடாகப்பிறக்கின்றசீவவர்க்கத்தினரல்லரென்பதும், இவைமுதலிய உட்கிடைப்பொருளெல்லாந்தெற்றெனவிளங்கும். இவ்வாறேஇப்பெரியபுராணமுழுதிலும், ஆங்காங்குஉள்ளிட்டுநோக்கி யுண்மையுணரத்தக்க திருவாசகங்கள்பற்பல. அவைகளைச் சரித்திரவரிசைமாத்திரையேபற்றிவெளிப்படநோக்கிச்செல்வார்க்கு, அவ்வுண்மைதோன்றாதென்பதுநன்குணர்த்தவே, "அருளும்வகையார்நினைவார்." என்று இத்திருவிருத்தத்திலாசிரியர்தெளியக்கூறியதென்க.

இவ்விருவரும், சிவவர்க்கத்தவரும்சிவசக்திவர்க்கத்தவருமாதலால், இவர்கள், தம்பதிகள்போல இல்லறவாழ்க்கையராய் ஊடல் கூடலாதிபலவிஷயங்களுந்தம்பால்நிகழக்காட்டிய எல்லாமுந்தாங்கள்கொண்டகோலத்துக்கிசைய, உலகநோக்கத்துக்குநடித்துக்காட்டியநாடகமாத்திரையே அன்றி வேறில்லை என்க. இவ்விருவரும்ஒருவரைஒருவர்விரும்பித்தனித்தனியேபிரலாபித்ததாகக்கூறுந்திருவிருத்தங்களிலுமாங்காங்குள்ள உட்கிடைகளாலும், அவ்விருப்பினைநிர்விகாரியாகியபரமசிவனிடத்திலேயே கூறிப்பிரார்த்தித்தமையாலும், அதனைஅவனே முடிப்பித்தமையாலும், இவர்கள்ஸவிகாரமுள்ளவர்களானால்? நிர்விகாரசிவன் அதற்குரியதண்டனைசெய்லேயன்றி, இவர்கள்கருத்துக்குஒத்துநின்று முடிப்பிக்கமாட்டானாதலாலும், இவர்களிடத்துள்ளவிருப்பத்தால்முடிப்பித்தானெனில் அவனிடத்தில்பக்ஷபாதமுளதாகி, நிர்பக்ஷபாதியென்னுஞ்சுருதிகளும்பொய்யாகிப்பரத்துவஹீனமும் வருமாதலாலும், பரமசிவன் எப்பொழுதும்யாரிடத்தும்நிர்பக்ஷபாதியேஎன்றுகூறும்பிரபலசுருதிப்பிரமாணம்எப்பொழுதுந்தப்புறாதாதலாலும், இவ்விருவரும் நிர்விகாரிகளேயென்றுமேற்கூறிய துண்மையேஎன்பதினிதுவிளங்கும்.

மூர்த்திகள், மானுடவுடிவினராய்ப்பூமியில் வந்தபின்னும், இவரதுபத்தினியாராகியபரவையார்க்குச்சுமையாட்களாய்ச்சிவகணங்களைவந்து குண்டையூரிலுள்ள, நெல்மலைமுழுதுஞ் சுமந்துகொண்டுவந்து, திருவாரூரிற்சேர்ப்பார்களானால், இவ்விருவரை.

யுஞ் சிவனுஞ்சீவசத்தியுமே என்றுதுவேறுகூறுதற் கெவ்வாற்றானுமிசையுமோ?

கோட்புலிநாயனார், உள்ளபடிமனப்பூர்வமாக, அதிசுந்தரதிவ்யலக்ஷணதருணிகளாகிய தமதுபுத்திரிகளிருவரையும், மணஞ்செய்துகொண்டருளுகவென்றுதாமேவலியப்பிரார்த்திக்கவும், மூர்த்திகள், அவ்வாறுஏன்றுகொள்ளாது அவர்களைத்தமக்கும் புத்திரிகளாகவேகொண்டருளுவாரானால், நிர்விகாரியாகிய இவர்பூர்வசிவநியமனங்கடவாமைப்பொருட்டுப்பரவையாரைமணஞ்செய்து கிருகஸ்தர்போலநடித்தல்நோக்கி. இவரைஎவ்விதத்தினாலாவது எப்போதாவது பெண்விருப்புற்றுச் சிற்றின்பநுகர்ந்தவரென்று கூறுதற்கியையுமோவென்பதுஉத்தமருணர்வாரென்க.

தன்னாதிலோகங்களாகிய இருப்புசித்தனையாதிகளையேபொன்னாக்குவனதரிசனவேதி பரிசனவேதிகள். இதுசிவநியமனமே. இவைஇனமாகவும், அப்பரமசிவனை, மூர்த்திகள்பொருட்டுத், தரிசனபரிசனம்யாதுமின்றி, லோகமல்லாதசுட்டமண்ணாகிய செங்கல்லைமாற்றுயர்ந்தபொன்னாக்கிக்கொடுப்பாரானால், மூர்த்திகளிடத்துள்ள அதிப்பிரியமும்; அதற்குரியகாரணமின்மைதன்பதும், உண்மைகண்டுணருந்திண்மையறிஞரன்றியாவரறிவல்லுநர்.

மூர்த்திகள், சீகாழிப்பதியானது ஸ்ரீஞானசம்பந்தர்திருவவதாரஸ்தலமாதலால், இதனைமிதித்துக்கொண்டுசெல்லேனென்றுபுறத்தேபோதல்கண்டு, தோணியப்பர்மிகவிரைந்துஅவரெதிர்சென்றுபாடுவித்ததும், திருவதிகைவீரட்டானமானது அப்பமூர்த்திகள் திருக்கைத்திருத்தொண்டுஞ்செய்துவீற்றிருந்தருளியதலமாதலால், இதனுட்செல்லேனென்றுபுறத்தோர்மடத்திற்சென்றுதிருப்பள்ளிகொண்டருள, உடனேவீரட்டானேசுரர் அங்குச்சென்று இருவர்க்கரியஅருமைத்திருவடிகள்பன் முறைசூட்டிப்பாடுவித்ததும், திருக்கச்சூரிலே ஈஸ்வரநாமப்பிரசித்தமகைஸ்வரியமகாப்பிரபுவாகியபரமசிவன்பிக்ஷைஎடுத்துவந்துஅன்னமளித்ததும், திருக்குருகாவூரிலே, சமஸ்தசராசரசிவகோடிகளனைத்தையுந்தமக்கடிமையாட்களாய்வைத்தாளுநின்ற பசுபதியாகியபரமசிவன், சோற்றுச்சுமையாளாய்ப்பொதிசோறுசுமந்துவந்து மார்க்கத்திலே காத்திருந்துகொடுத்தருளியதும், மூர்த்திகள் திருமுதுகுன்றம்நோக்கிச்

செல்லும்போது, பரமசிவன்வேதியராய்வந்து இதுகூடலையாற்றூர்க்குச்செல்லும்வழிஎன்றுகூறி அங்குச்செல்லுவித்துப்பாடுவித்ததும், திருமுதுகுன்றத்திற்பெற்றபொன்னை, மணிமுத்தாற்றிலிடுவித்ததும், திருவாரூர்க்கமலாலயத்திருக்குளத்திலெடுப்பித்ததும், அதனைஅக்குளத்திலுடனேகாட்டாதுமறைப்பித்து அதற்கொருபதிகம்பாடியருளியபின்காட்டியதும், அதன்பின்னும் அப்பொன்னைமாற்றுக்குறையக்காட்டி, அதற்கொருபதிகம்பாடியருளியபின் அதனையேமாற்றுநேரொக்கக்காட்டியதும், இவைபோன்றனபற்பலவும்உற்றுநோக்குவார்க்கு, மூர்த்திகள்தந் திருவாய்த்திருத்தொண்டில், பரமசிவனுக்குஎல்லையின்றி மேலுமேலுமுறுகிவளருகின்ற அதிவிருப்பமும், அதனாலேயேபரப்பிரயோசனங் கருதி இவரை, வலிந்துகாரணம்புணர்த்திப் பூமிக்கனுப்பினாரென்று மேற்கூறிய துண்மையேஎன்பதும்தெற்றெனவிளங்குமென்க.

மூர்த்திகள், பரவைநாச்சியாருடனாகவந்து, கமலாலயத்திருக்குளத்தில் வடகீழ்த்திசையிலிறங்கிப் பொன்னைக்காணாதபோது, அதற்காகத்திருப்பதிகம்பாடியருளியதை விளக்குகின்ற பெரியபுராணத்திருவிருத்தம், "ஏத்தாதேயிருந்தறியேனெனுந்திருப்பாட்டெவ்வுலகுங், காத்தாடுமம்பலத்துக்கண்ணுளனுங்கண்ணுதலைக், கூத்தாதந்தருளாயிக் கோமளத்தின்முன்னென்று, நீத்தாருந்தொடர்வரியநெறிநின்றார்பரவுதலும்" என்பதாம். இதில், மூர்த்திகளை "நீத்தாருந்தொடர்வரியநெறிநின்றார்." என்று கூறுகின்ற உண்மைகாண்க.

சாமானியருஞ்சிறிதறிந்தஅளவே, பொன்பெண்முதலியஎல்லாம்அநித்தியங்களேஎனத்துணிந்துஅப்பற்றொழிதலையேவேண்டுவாராகவும், அதுவேசகலசாஸ்திரசம்மதமாகவும், அதுவேமுத்திக்கேதுவாகவும், அத்தகையசாமானியர்தரத்திலுமிகமிகத்தாழ்வானநிலையென்னும்படி, மூர்த்திகள்பொன்னைவேண்டிநிற்றலையும், அவ்வாறுவேண்டும்பொழுதும், நான்இவளிடத்தில்திருமுதுகுன்றத்தில் மணிமுத்தாற்றிலிட்டபொன்னை, இத்திருவாரூர்க்குளத்திலெடுத்துத்தருகின்றேனென்றுகூறிய அப்பொழுதே பரிகசித்தாள்; உறுதிகூறி அழைத்துவந்தேன், இவளுமிதுபார்த்துக்கொண்டுநிற்கின்றாள்; பொன்காணாதொழிதலுமன்றி இவள்முன்னே எனக்குஅவமானமுமுளதாகின்றது, ஆதலால்அம்பலக்கூத்தனே,

இவ்விடத்தில் அப்பொன்னைக்காட்டித் தந்தருளாயென்பனவாதி பொருள்விரிதற்கிடயாக, "இக்கோமளத்தின்முன்" என்றுவேண்டிக்கொள்ளுதலையும், அதுவும்வேறுசொற்களாற்கூறுது; பத்தினிவாஞ்சைமுதிர்ந்தவர்போலக்கோமளமென்றுமிகவுயர்த்தித்தம்பத்தினியைச்சிலாகித்துக்கூறுதலையும், தமது செய்புள்மூலமாகவே விளக்குகின்ற இந்நூலாசிரியரே, அச்சுந்தரமூர்த்திகளைப்,பற்றுமுற்றுமொழிந்தமுத்தர்களாலும்நழுவாதுதொடர்ந்துசேறற்கரியதத்துவாதீதஉத்தமோத்தமகிஷ்களங்க சுத்தஸ்தானத்தில் நிர்ச்சலனராய்நிலைத்துநிற்கின்றவரென்றுஎடுத்துக்கூறுவாரானல்,மூர்த்திகள்பொன்னைவேண்டினரென்பதும், பெண்ணைக்கோமளமென்று வாஞ்சித்துக்கூறினரென்பதும்,இவைபோலஇன்னுமுன்பினுள்ள சுவைகளும்; பரமசிவப்பிரீதிகரமாக லோகோபகாரத்தின்பொருட்டுவந்தருளியகோலத்துக்கிசைய நடித்தனவேயன்றி உண்மையென்றுகூறுதற்கு எட்டுணையும்பொருந்துமோவென்பதுத்தமர்களுணர்வாராக.

இதனைப்,பின்னையோர்பலரும்,"துறந்தமுனிவர்தொழும்பரவைதுணைவா" என்பதாதியாகஉண்மைகூறுதலாலுந்தெளியலாம். பரவைநாச்சியார், பற்றுமுற்றுமற்றுத்துறந்த முனிவர்களாலே தொழத்தக்கவரானல்? இவரதுதுணைவராகியமூர்த்திகள் மகிமை கூறவும்வேண்டுமோ? பரவையார் சிவசத்திவர்க்கத்தவராதலின ன்றே? முனிவர்களாலுந்தொழப்பெறுகின்றுர். இத்தகையசத்தியாகியபரவையார்,சிவமாகியமூர்த்திகள் சிற்றின்பநுகர்ச்சிக்கு வதுவானரென்னும்மூடவசனம்எக்கதியிற்புகுத்துமென்பதினிக்கூறவும்வேண்டுமோ? மூர்த்திகள்,பொன்னைக்காட்டித்தரும்படிவேண்டும்போதுவேறுநாமங்கூறுது."கூத்தாதந்தருளாய்" என்றுகூறியகுறிப்பும்,பரமசிவனே,நீயும்இவ்விதமாகஎன்னை ஆட்டுவித்து நடிக்கின்றுய், நானும்உன் ஆஞ்ஞைமேற்கொண்டு நடிக்கின்றேன் என்னுமுண்மையைவிளக்கும்.

முன்கயிலையில்உமாதேவியார் ஆஞ்ஞைசிரமேற்கொண்ட அநிந்திதையார்,தொண்டைநாட்டிலே,திருவொற்றியூருக்குச்சமீபத்திலுள்ளஞாயிறுஎன்னும்நகரத்திலே,வேளாளர்குலத்திலே,அருந்தவம்புரிந்தஞாயிறுகிழவரிடத்தேபுத்திரியாராய் வந்தருளிச்சங்கிலியாரென்னும் நாமம்பூண்டுவளர்ந்துவருவாராயினர்.

தமிழ் [illegible] பகம்
சென்னை 600 0[illegible]
நூலகம்



இவரிவ்வாறுமானு[illegible]வரும்போதும் உமாதேவியார் திருவடிகளை அணுத்துணையுமறவாத அன்புடன்வந்த அம்முறையினால், அக்கயிலையிலிருந்தபோது தம்மிடத்துள்ள முதன்மையானவுணர்வு தம்மைவிட்டுநீங்காதுஉடனாகவேவந்தனைதலால், இங்குவந்தபின்னும், தமக்கொருவர்போதிக்கவேண்டாது, தாமே யாவும் அறிந்துகொள்ளு முற்றுணர்ச்சியராயிருந்தாரென்க. இதனை, மலையான்மடந்தைமலர்ப்பாதமறவாவன்பால்வந்தநெறி, தலையாமுணர்வுவந்தணையத்தாமேயறிந்தசங்கிலியார்.'' என்னுந்திருவிருத்தத்தாற்காண்க.

இவர்விளையாட்டிற்குரியசைசவப்பருவத்திலும், மானுடத்தன்மைசிறிதுமின்றிப்பூர்வநிகழ்ச்சித்தெய்வத்தன்மையராகவேஇருந்தார். இதனை, ''சீர்கொண்மரபில்வருஞ்செயலேயன்றித்தெய்வநிகழ்தன்மைபாரிலெவருமதிசயிக்கும் பண்பில்வளரும்பைந்தொடியார்'' என்னுந் திருவிருத்தத்தாலும் ''வடிவுங்குணமுநம்முடையமகட்கு மண்ணுளோர்க்கிசையும், படிவமன்றிமேம்பட்டபரிசாம்பான்மையறிகிலோம்'' என்றிவர் தந்தையார்தம்பத்தினியாரிடத்துக்கூறுதலையுணர்த்துந்திருவிருத்தத்தாலுங்காண்க.

இவரது, தந்தைதாயர், இவர்க்குமணஞ்செய்க்கருதிப்பேசுவதுநோக்கி, நீங்கள்கருதுவதுநமக்குப்பொருந்துவதன்று, சிவபிரான்திருவருளையேபெற்றவராகியஒருவர்க்கேநான் உரிமையாவதென்று, சுந்தரமூர்த்திகளையேகுறிப்பாலுணரும்படிகூறியருளினர். இதனாலுமிவர்முற்றறிவினரென்பதினிதுவிளங்கும். இதனை, ''ஏயுமாற்றமன்றிதுவெம்பெருமானீசன்றிருவருளே, மேயவொருவர்க்குரியதியான்'' என்னுந்திருவிருத்தத்தாற்காண்க. இதிலுள்ளஏதேத்தேறகாரமும், சுந்தரமூர்த்திகள்எப்போதாவதுபரமசிவனால், குற்றங்கண்டுநிக்கிரகிக்கப்பெற்றவரல்லர், எப்போதும் அநுக்கிரகமாகியதிருவருளையேபெற்றவர்பெறுகின்றவரேஎன்பதைநன்கு விளக்கும்.

இச்சங்கிலியாரிடத்தேதன்றுந்தெய்வத்தன்மையே யுள்ளதென்பதை, இவரைமணஞ்செயக்கருதிமணம்பேசிவரச்சிலமுதியரைவிடுத்தாெனாருவன், அத்தீமையைஆங்குச்செய்தமையால்உடனேஇறந்தமையாலும் அவனிறந்ததுபோலவே அவனால்விடுக்கப்பட்

டாருமிறந்து அவனுடன்சென்றமையானுந்தெளியலாம், இதனை நிதங்கிழைத்தேயிறந்தான்போற்செல்லவிடுத்தாருடன்சென்றார் என்னுந்திருவிருத்தத்தாற்காண்க. இதனால், இவரதுகுலமும்வடிவும்நோக்கிமணஞ்செயக்கருதிய அபுத்திபூர்வமானகுற்றத்திற்கே உயிரிழந்தொழியும்பெருந்தண்டனைநிகழ்ந்ததுதெரிந்தும்இன்னுமிவர்சரித்திரமகிமைமுற்றுந்தெரிந்தும், இவரைச்சுந்தரமூர்த்திகளதுசிற்றின்பநுகர்ச்சிக்குவுதவானவரென்றுபோகூழ்வசப்பட்டுக்கூறும் புத்திபூர்வப்பெருங் குற்றத்திற்குளதாகுந் தண்டனைகளிவ்வளவினவென்றெடுத்துரைத்த லெம்மனோர்க்கியைவதன்று, அமைக. இன்னுமிவரது தெய்வத்தன்மைவிளக்குவனபற்பல. ஆங்காங்குற்றுநோக்கியுண்மைதெளிக.

இச்சங்கிலியாரைச்சுந்தரமூர்த்திகளுக்கு மணஞ்செய்விக்கும்பொருட்டுப்பரமசிவனே இரண்டு முறைசென்றுடன்பாடுசெய்வித்துத்திருத்தொண்டர்க்கறிவித்தருள, அவர்களும் அவ்வாறுசெய்தார்கள். இக்கலியாணமும்பரவையார் கலியாணமும்பெற்றோர்சுற்றத்தார் சம்பந்தம்சிறிதுமின்றித், திருத்தொண்டர்களேபாத்தியஸ்தர்களாயிருந்துசெய்யப்பெற்றமையானுமிவர்கள் சிவவர்க்கத்தவர்களேஎன்பதினிதுதெளியலாம்.

மூர்த்திகளும் பரவையார்சங்கிலியாரும், சிவமுஞ்சத்திகளுமேயாதலால்ஏனையர்க்குப்போலஇவர்களிடத்துச்சிற்றின்பநுகர்ச்சியெவ்விதத்தினும் எப்பொழுதுமில்லை, அனவரதம் நித்தியானந்தமாகியபேரின்பமேயுள்ளதென்பதை, "இந்நிலையிற்பேரின்ப மினிதமர்வார்" என்றுவிளக்கிய அருமைத் திருவிருத்தத்தாற்றெளிக. இது இவர்சங்கிலியாரை மணஞ்செய்தபின் அவரோடுகூடி இன்புற்றுவாழ்கின்றாரென்னுஞ்சரித்திரங்கூறுமிடத்துள்ளதே, இவ்வாறுதிருவொற்றியூரிலே, சுந்தரசிவமும்சங்கிலியாராகியசிவசக்தியும்பேரின்பமாகியநித்தியானந்தானுபவப்பெருவாழ்வுற்றிருக்கும்பொழுது மூர்த்திகள், திருவாரூரில்வீதிவிடங்கத்தியாகராசதரிசனத்தில்மிகுவிருப்புற்று ஆங்குச்செல்லக்கருதி வெளிவந்தவுடனேஇருகண்களும்ஒளிமறைந்துவழிதெரியாதாக, அதுசங்கிலியாரைப்பிரியேனென்று சிவசந்நிதியிற்கூறியசத்தியத்துக்குவிரோதமாக, அவரைப்பிரிந்துசெல்லநினைத்தமையால்வந்ததென்றுடனே

தெரிந்தார். இதனை, ''மைவிரவுகண்ணார்பாற்சூளறவுமறுத்ததனு, லிவ்வினைவந்தெய்தியதாமெனநினைந்து'' என்னுந்திருவிருத்தத்தாற்காண்க. இதனுலிதுவந்ததென்றுள்ளபடி தெரிந்துகொண்டாராதலால், சங்கிலிபாரைப்பிரியாதிருந்தால் மறைந்தகண்கள் வெளியாமென்பதுந்தெரிந்தவராயிருந்தும், வீதிவிடங்கத்தியாகராஜதரிசனவிருப்பமிகுதியால் அங்குச்செல்லுதலையேயொருதலையாகத்துணிந்துசெல்வாராயினர். ஆகவே, நமதுகண்மறைந்ததுஞாயமே; அதனைநாம்வகித்துக்கொண்டுபின்புதான்நீக்கிக்கொள்ளவேண்டும்; நீக்கிக்கோடலுந்திண்ணமேயென்று தெரிந்துகொண்டே சென்றாரென்பதுந்தெளிவாமென்க.

அங்ஙனமாகில் இடை இடையேகண்வேண்டிப்பாடியதென்னையோவெனில்? சீவர்கள்தமக்குவருமிடர்களைப்பரமசிவனுக்குவிண்ணப்பித்துப்பன்முறைவேண்டியே திருவருளால்மாற்றிக்கொள்ளவேண்டியபரதந்திரர்களாதலால், அவர்கள், தாம்பன்முறைபாடிவேண்டிய இச்செயல்நோக்கி அவ்வாறுசெய்திடர்நீங்கியுய்கவென்னுந்திருவுளக்கருணையாலன்றிவேறில்லையென்க. இவர், கண்மறைந்ததுஞாயமேயெனக்கொண்டது, பரமசிவன்றன்னால் அத்தியந்தபிரீதிவைக்கப்பெற்றவர்களிடத்தும், சிறிது குற்றங்கண்டாலும்பக்ஷபாதமின்றி அதற்குரியதண்டனைசெய்பவனே என்றுலகறிந்துசிறிதுங்குற்றஞ்செய்யாதுய்பக்கருதியதிருவருட்செயலேயென்க. மூர்த்திகள், திருவொற்றியூரினின்றும்வருமார்க்கத்திலுள்ளதலங்களைத்தரிசித்துக்கொண்டுவரும்போது திருவெண்பாக்கத்தில்கோலொன்றும், காஞ்சீபுரத்தில்இடக்கண்ணும், குற்றமென்றுவழங்குகின்றதிருத்துருத்தியில் நோய்நீக்கமும்பெற்றுத் திருவாரூர்வந்துமற்றைக்கண்ணும்பெற்றுப், பரவையார்ஊடல்தெரிந்து, தியாகராசப்பெருமானையேதூதராகஅனுப்பி ஊடல்நீக்குவித்துத்திருமாளிகைசென்றின்புற்றமர்ந்தனர்.

இதனாலும், மூர்த்திகளும்பரவையாருநிஷ்காமிகளாகியசிவசக்திகளே என்பதினிதுவிளங்கும். எங்ஙனமெனில்? இவ்விருவரும், ஒருவரை ஒருவர்சீவர்களைப்போலச்சிற்றின்பஏதுவாகக்காமித்துப்புணர்ந்துமக்களைப்பெற்று மேலுமேலுஞ்சமுசாரபந்தப்படுமியல்பினரானால்! காமாதிகுற்றமுற்றுநீங்கி இருவினையொப்புமலபரிபா

கமுற்றசத்திபாதற்கே முத்திகொடுக்கப்பெறுமென்றும் காமாதி குற்றமுற்றும்நீங்கினன்னெறிநிற்கவேண்டியது அத்தியாவசியமென்றும், மீறிநடப்பவர்நரகிற்புகுத்தித்தண்டிக்கப் பெறுவார்களென்றும், வேதசிவாகமசுருதிமூலமாகயாவர்க்கும்விதித்தருளியபரமசிவன், அவ்விதிக்குவிரோதமாகத், தாமேதூதாளுமாகச்சென்று பரவையாரை இணக்கிமூர்த்திகள் அவரோடுகூடி இன்புற்றிருக்கச் செய்வாரா? என்பதூகித்துணருங்கால் இவ்விருவரும் பிரிவின்றிச் சேர்ந்திருத்தல்நம்மனோர்போலச்சிற்றின்பத்திற்குஏதுவாகா; பேரின்பவிளைவேயாய், அதுலோகோபகாரத்திற்குஏதுவாமென்பது கருதியே, பரமசிவன்தூதாளாகச்சென்றாரன்றிவேறில்லை என்னுமுண்மைதெளிவாதாலாலென்க.

பரமசிவன், முன்உமாதேவியாரைப்பிரிந்து கயிலையில்யோகியாயிருந்தபொழுது, சமஸ்தசீவர்களும், யாதொருசெயலுமின்றி நிஷ்காமிகளாய் உலகவிருத்திக்கேதுவான சிற்றின்பநுகர்ச்சியின்றிருந்தசெயல்பிரசித்தமே. மூர்த்திகளும்பரவையாரும் சிவசக்திவர்க்கத்தவராதலால், இப்பொழுது இவ்விருவர்பிரிவுங்காலநீளுமாகில், முன்னைத்தம்பிரிவிற்போலச், சமஸ்தசீவர்களும்செயலற்று நிஷ்காமிகளாவார்கள்; அங்ஙனமாதல்அச் சீவர்கள் கன்மசேஷம் புசித்தொழித்துநன்மையடைதற்கு விரோதமாகுமாதலால், அவ்வாறாகாது, இவ்விருவரும்பிரிவின்றிச்சேர்ந்திருத்தலைச்செய்யின் அதுசீவர்கள்கன்மசேஷம்புசித்தொழித்து நன்மையடைந்துய்தற்கேதுவாகுமென்றெண்ணியேபரமசிவன்தாமே தூதாளாகச்சென்றதன்றிவேறில்லை என்க. இதனை, "ஞாலமுய்யவெழுந்தருளுநம் பிதூதர்பரவையார், கோலமணிமாளிகைவாயில்குறுகுவார்." என்னுந்திருவிருத்தத்தாலும்நன்குணரலாம். இது, நம்பியாகியசுந்தரமூர்த்திகளுடைய தூதராகிய தியாகராஜப்பெருமான் பரவையார் திருமாளிகைக்கு எழுந்தருளியது, ஞாலத்திலுள்ளசீவர்கள்உய்தற்காகவேஎன்பது தெளியவிளக்கி மேற்கூறியவாறேவலியுறுத்தல்காண்க.

நாயகநாயகிகளிடத்துநிகழும் பிணக்கைமாற்றி இணக்கிச்சமாதானஞ்செய்யவேண்டுமேல், அத்தம்பதிகளின் தகுதிக்குரியதரத்தினராயுள்ளாரொருவர்சென்றுசமாதானஞ்செய்தாற்றான்அக்

காரியம்முடிவுபெறும். இது உலகவழக்கப்பிரசித்தமே. மூர்த்திகள் பரவையார் தகுதிக்குரியபெருந்தரத்தினர்பரமசிவனேயன்றிப் பிறரில்லையாதலால், அப்பரமசிவனையே அவரும்வேண்டிக்கொண்டார், அதுதமது தரத்திற்குச்சிறிதுங்குறையில்லையாதலால், அப்பரமசிவனே தூதாளாகச்சென்றாரென் றுலகவழக்கில்வைத்தாக்கினும் இழுக்காதென்க.

ஒருவரிருவர்செல்வது தூதர்களியல்பு. அது, பெண்கள்பாற்புருடர்கள் சிற்றின்பநுகர்தலைச்செய்தற்கு ரகசியமாகச்செல்லுந் தூதர்கள்செயலாம். தியாகராசப்பெருமான், மேற்கூறியபடி ஞாலமெல்லாம்உய்தற்காகவே தூதரென்றொருவியாசங்காட்டிச்சென்றாராதலால், தாம்தனித்துச்செல்லாமல், அரிபிரமேந்திராதிசமஸ்ததேவர்களும், அளவில்லாதமுனிவர்யோகர்சித்தர்முதலானோரும், அளவில்லாதபூதகணங்களும், கணநாதர்களும், திருவணுக்கத்திருத்தொண்டர்பற்பலரும், திருநந்திதேவருஞ்சூழ்ந்து சேவித்துவர, வேதங்களெல்லாந்தொடர்ந்துவர, வாத்தியங்களெல்லாங்கோஷித்துவர, ரிஷபாரூடராய்க், கற்பகமந்தாராதிபுஷ்பமழைபொழிந்துவர, ஒரேதிருவீதியிற்சிவலோகமுழுதுங்காணும்படிஎழுந்தருளிப்பரவையார் திருமாளிகைக்குச்சென்றருளினாராதலால்; இதனைச், சிற்றின்பநுகரச்செய்தற்குஏனையர்செல்லும்ரகசியத் தூதுபோல்வதென்றுமூடரேனுமிசைக்கமுடியுமா? பரமசிவன் மேற்கூறியவாறுசென்றாரென்பதை ''பாரிடத்தலைவர்முன்னும்பல்கணநாதர்தேவர், நேர்வுறுமுனிவர்சித்தரியக்கர்க்ணிறைதலாலே, பேரருளாளர்செய்தப்பெற்றமாளிகைதான்றென்பாற், சீர்வளர்கயிலைவெள்ளித்திருமலைபோன்றதன்றே.'' என்பதுமுதலிய திருவிருத்தங்களாற்காண்க.

இத்தனைவைபவங்களுடன் இடபாரூடராய்ப் பரமசிவன்சென்றருளியதை உற்றுநோக்கும்உத்தமர்கள், பரமசிவன்தூதாளெனச்சென்றது, மேற்கூறியபடி ஞாலமெலாம்உய்விக்கும் அநுக்கிரகத்தின்பொருட்டேயாகுமென்னு முண்மைதெளிவார்கள். ஏனையர், பெண்களையிணக்க ரகசியமாக்ச்செல்லும்தூதுபோல்வதென்று, ஒருவாறுபோகூழ்வலத்தால்அறிவிழந்துகூறின், அவர்கள் எத்துணைச்சிறந்தாராயினும்சகித்தற்கரியபெருந்தண்டனைப்படுத்

துன்புறுவார்களென்னுமுண்மைவிளக்குதற்காகவே, அதிதீவிரபரிபாகமுதிர்ந்தபேரறிஞராகியஏயர்கோன்கலிக்காமநாயனரை அவ்வாறுநினைப்பித்து, அந்நினைப்பின்வசத்தராய்நிற்கும்பொழுதும் அவரதுதிருவாக்கிற்றோன்றுந்திருமொழிகள்மூலமாக, அவர் தம்மிடத்துவைத்தஇடையறாப் பேரன்பின்பெருக்கமே நிலைதவறாது விளங்குதல்கண்டும், அந்நினைப்பினால்வந்தசிவாபசாரத்திற் குரிய தண்டனையாகச், சகிக்கமுடியாதசூலைநோயிலகப்படுத்தி, அச்சிவாபசாரமும் சுந்தரசிவனுக்குச்செய்ததாதலால், இச்சூலைநோய் நமதுசுந்தரன்வந்துதீர்த்தாலன்றித்தீராதென்றுகூறி, அதனாலே நம்மாலுமுடியாதென்னுங்குறிப்புங்காட்டி, அவ்வாறுமூர்த்திகளை அனுப்பியே அந்நோய்நீக்கமும் அத்திபந்த நேசமுஞ்செய்விப்பாரானால், இனி அவ்வாறுநினைக்குமெனையாதுர்க்கதியைக்கூறவும்வேண்டுமோ? கூறப்புகினும்எல்லைப்படாவென்க.

உலகில்நாயகிகளும் நாயகர்களும்ஊடல்கூடலைச்செய்தல் முறையென்பதும், அவ்வாறு ஊடிக்கூடுதலிலேஇன்பமாமென்பதும் விளக்குதற்கே, பரமசிவனைபரவையாரைஊடச்செய்துபின்கூடச்செய்தருளினார். அது அவரேசெய்வித்தாரென்பதனை, அவர் தூதுசென்றுவந்து உடன்பாடுதெரிவித்தபின்பு, மூர்த்திகள் அப்பரமசிவனை நோக்கி, "பந்தமும்வீடுநீரருள்செய்யும்படி செய்தீ, ரெந்தை பிரானே"என்றுகூறியதிருவிருத்தத்தாற்காண்க. இது, எந்தைபிரானே சீவர்களுக்குப்பந்தமும், அதன் நீக்கமும்தேவரீரே அருள்செய்யுந்தன்மையை, உம்மில் வேறாகாதவென்னிடத்தில், இப்பொழுதுபரவைமூலமாகப்பந்தமுளதாக்காட்டி, அதன்நீக்கமுஞ்செய்துவிளக்கியருளினீர், என்னும் பொருளைத்தந்துமேற் கூறியதைத்தெளிய விளக்குமென்க.

இவ்விருவருங்கூடியிருந்தின்புறுவரும், அனவரதமும்பரமசிவனதுதிருவருட்பெருக்கின்றிறத்தையேபேணித், தங்கள் நிர்மலானந்தக்கரணத்தினிலிடையறாதுமருவுகின்றபேரின்பவெள்ளத்தழுந்திச்சுத்தாத்துவிதப்புணர்ச்சியேவாய்க்கப்பெற்று ஒருவருளொருவர்கலந்துநிற்கின்றநிலைமைபோலொருவரேயாய்ச்சிவானந்தானுபவிகளாய்வாழ்தலேயன்றிவேறில்லையென்க. இதனை, இருவருந்தம்பி[illegible]டையாடுச்செய்க. திருவருட்கருணைவெள்ளத்திறத்தி

ளைப்போற்றிச்சிந்தைமருவுபேரின்பவெள்ளத்தழுத்தியபுணர்ச்சி வாய்ப்ப,வொருவரொருவர்மேவுநிலைமையிலுயிரொன்றானார்', என்றதிருவிருத்தத்தாலினிதுகாண்க. பரவையாருடன்மூர்த்திகளை சேர்ப்பிக்கும்இக்காரியத்தைப்,பரமசிவன்,பிறரைக்கொண்டுமுடிப்பிக்காமல் தாமேசென்றருளியது, பற்றுமுற்றும்நீங்கப்பெற்று அதிதீவிரபரிபாக முதிர்ந்தசீவன்முத்தர்களால், பிராரத்தகர்மம். புசிக்கப்படும்பொழுது, சரீரம்பற்றிவரும் ஆகாமியம்அவர்களைச் சாரவிடாது, அதனைப்பரமசிவனே. தமதுசெயலாகவேகொண்டருளுவரென்று சிவசாஸ்திரங்கூறுமுண்மையை அறிவிற்சிறிய நம்போலிகளுக்குத்தெளிதற்பொருட்டுமாமெனக.

சேரமான்பெருமாணாயனார், அரசர்மரபில்அவதரித்தருளினவர்.இவர்அரசாட்சிக்குரியஅங்கங்களை அவசியமாகவகித்துக்கொள்ளவேண்டியவராயிருந்தும்,அவைமுழுதும் அதிபாலியத்திலேயேவெறுத்துத்தள்ளியிட்டுத், தமதுசெயல்முழுதுஞ்சிவனடித்திருத்தொண்டேயாகச்செய்துவந்தார்மந்திரிகள்இன்றியமையாமை தெரிவித்து வேண்டிக்கொண்டது குறித்துத், திருவருட்சம்மதந்தெரிந்துஅரசாட்சிக்குடன்பாடுசெய்து,அதனைவகித்தருளிச், சுபதினத்தில்முடிசூடப்பெற்று,நகர்வலம்வந்துரத்தினசிங்காதனத்திற்கொலுவீற்றிருந்தருளுவதற்காக,யானைமீதெழுந்தருளிச்,சமஸ்தராஜவிருதுகளுடன்மந்திரிகள்முதலாயஅங்கத்தவர்யாவருஞ்சூழத்திருவீதியிலேபவனிவந்தருளுகின்றஇந்தச்சமயத்திலும்,அவ்வீதியில்ஒருபக்கத்திலொதுங்கிப்பதுங்கிவருகின்றஒருவண்ணானுடம்பிலுள்ள உவர்மண்வெளுப்பைக்கண்டளவே, யானையினின்றிறங்கி அவன்முன்விரைந்துசென்றுவீழ்ந்துநமஸ்கரித்தருள, உடனே அவன்நடுநடுங்கி அடியேன் அடிவண்ணானென்று சொல்லிக்கொண்டுபன்முறைவணங்குதல் கண்டபின்னும், அவனை நோக்கி அடியேன்உமதுஅடிச்சேரன்,நீர் திருநீற்றுத்திருவேடத்தைநினைப்பித்தீர் வருந்தாது செல்லுமென்றுரைத்தருளினாரானால்இவரது திடபத்திச்சிறப்பும்சிவத்துவப்பொலிவும் எவர்தாமெடுத்திசைக்கவல்லார்,நிற்க.

இத்தகையசேரமான்பெருமாணாயனாருக்குத், தினந்தோறுந் தவறாதுசியதியாக, இவரதுசிவபூஜாந்தத்திலே தமதுதிருச்சிலம்

பொலிகேட்பித்துவந்தசிவபிரான், ஒருதினத்திற்கேட்பிக்காதுதாமசித்துநாயனார்வாளாயுதத்தையெடுத்த அவசரம்நோக்கிஉடனேசிலம்பொலிகேட்பித்து, அன்பனே! நமதுசுந்தரன்சிற்சபையிலேநம்மைப்பாடுகின்ற திருப்பாடல்கேட்டு நின்றோமாதலால் இன்றுசிலம்பொலிகேட்பிக்கத்தாமசித்தோமென்றருளினர். இதனாலும், பரமசிவன், சுந்தரமூர்த்திகளிடத்து அளவைக்கடந்துள்ள அதிப்பிரியரென்பதும், தம்மைப்போலவேயாவரும் அவரிடத்து அதிப்பிரியர்களாய்மெய்யன்புடன் அவரைவழிபாடுசெய்துய்கவெனத் திருவுளங்கொண்டேமூர்த்திகளின் சொரூபமகிமையை ஆங்காங்குத் தெரிவித்தருளுகின்றாரென்பதும்தெளிவாதல்காண்க.

உபசாரமாத்திரையாகவேனும் பரமசிவன் குபேரன் றோழரென்றுகூறப்பெறுதல்போல, மூர்த்திகளும், செல்வத்தாற்குபேரனின்மேம்பாடுடையரும், அதன்மேலும்சிவத்துவவிளக்கச்சிறப்பினருமாகியசேரமான்பெருமாணாயனார், பரமசிவன்மூலமாக உண்மைதெரிந்துதம்மைவந்தடைந்து வணங்கி அடிமைத்தன்மைமேற்கொண்டொழுகிவரவும், தாம்அவரைநட்பினராகமேற்கொண்டுவருதலால், சேரமான்றோழரென்றுகூறப்பெறுவாராயினர். இதுவும் மூர்த்திகளைப்பரமசிவனெனபதற்கோரேதுவாகும்.

சுந்தரமூர்த்திகள், ஒருமுறைதமதுதோழராகிய சேரர்பிரானிடன், காவிரியின்தென்கரைவழியாகமேற்றிசைநோக்கிச்சிவஸ்தலயாத்திரைசென்று திருக்கண்டியூரைவணங்கிக்கொண்டுவெளிவந்தருளினர். அப்பொழுதுசேரர்பிரான்காவிரியின்வடகரையிலுள்ள திருவையாறுதோன்றக்கண்டு, அக்காவிரிஇருகரையும்அழித்துப்பிரளயவெள்ளம்போலப்பெருகி, ஓடமுதலியன செல்லவிடாது அதிவேகமாகச் செல்வதறிந்தும், மூர்த்திகளைநோக்கிச்சுவாமீ! அடியேன்மனம்இத்திருவையாற்றிற்சென்றுவணங்கவிரும்புகின்றது; இந்நதியைக்கடந்துபோய்வணங்குவோமென்றுவிண்ணப்பித்தார். இதனால், சேரர்பிரான், சுந்தரமூர்த்திகளைநம்மைப் போலவடிவங்கொண்டதுநோக்கிமனிதராகஒருபொழுதும் நினைத்தவரல்லரென்பதும், பரமசிவனேமானுடவடிவுகொண்டு வந்தருளினரென்று அவரதுசொரூபநிலைஉள்ளபடிதெரிந்தே அவ்வாறுகூறினரென்பதும்தெளிவாதல்காண்க.

சேரர்பிரான்வேண்டுகோளின்படி, மூர்த்திகள், அங்குநின்றுகொண்டே திருப்பதிகம்ஒவ்வொரு திருப்பாசுரங்களினிறுதியினும். "ஐயாறுடையவடிகளோ" என்றுபாடி அழைத்தருள்வாராயினர். உடனே, பசுவானது தன்கன்றின் அழைப்பொலிகேட்டளவே மிக்கஆவலுடன் கனைப்பொலிகாட்டிமிகவிரைந்தோடி வருதல்போலப், பஞ்சநதீசுரரானவர், தம்மைம்மூர்த்திகள் அழைத்தருளிய திருப்பாசுரத்தொலிகேட்டளவே, அண்டமெலாநிறைந்தசராசரசீவகோடிகள்முழுதுங்கேட்கும்படி, "ஓலம்ஓலம்" என்று அசரீர்த்தொனிசெய்தருளினார். உடனே, காவிரிநதிவெள்ளம், மேற்றிசையிற்பளிங்குமலைபோலத்தேங்கிநிற்க, அதன் கீழ்த்திசைவழியாக இருவரும், திருத்தொண்டர்கள் பரிசேவகர்கள் பல்லாயிரவருடன்சென்றுபஞ்சநதீசுரதெரிசனஞ்செய்துகொண்டுமீண்டு அவ்வழியேவந்துதென்கரைஏறியபின் அணையின்றிச்சிவாஞ்ஞைபாற்றேங்கிநின்றஅவ்வெள்ளம் அணையுடைத்தோடுதல்போல அதிவேகமாகஓடியது. இதனாலும், பரமசிவனும்மூர்த்திகளும்அப்பொழுது வடிவத்தால்வேறுற்றிருந்தாலும்சொரூபத்தால் வேறுபாடுடையரல்லரென்பதினிதுவிளங்குதல்காண்க.

மூர்த்திகள், திருவஞ்சைக்களம்பணிந்து, சேரர்பிரான்வேண்டுகோட்கிணங்கி அங்கிருந்து திருவாரூரைநினைந்துதிரும்பி விரைந்துவரும்போது, சேரர்பிரானுடன்அனுப்பப்பெற்ற அளவிலாப்பலவகைத்திரவியங்களைத், திருமுருகன்பூண்டியில் வீற்றிருந்தருளுகின்றபரமசிவன், தமது சிவகணங்களைவேடர்களாய்ச்சென்றுகிரகிக்கச்செய்து, மூர்த்திகள்வந்துதம்மைப்பாடியபின்புகொடுத்தருளினார். இதனால், மூர்த்திகள் திருவாரூரை நினைந்துவிரைந்து செல்கின்றாராதலால், திருமுருகன்பூண்டியில்வந்துதம்மைப்பாடாதுவிடுவரெனக்கருதி இவரது திருப்பாட்டிற்கொண்ட பேராசையினாலேயே, திரவியங்களைக்கவர்வித்தாரென்பதுதெளிக. அன்றியும், பரமசிவன், தாமும்மூர்த்திகளும்வேற்றுமையின்றிவிளங்கும்உரிமைப்பாத்தியத்தால், மூர்த்திகளுக்கு இதுவரையுந்தாமேபொருள்கொடுத்து வந்ததுபோல, இப்பொழுதுந் தாமே முன்னிலையிற் கொடுப்பதன்றித், தமதுபக்தர்களானாலும் அவர்பொருளுந்தம்மாற்கொடுக்கப்பெற்றதம்பொருளேயானாலும், பிறர்மூலமாகப்படர்க்கையிற்கொடுக்கப்பெறுதல், தமதுரிமைக்கும்அவர்தகுதிக்கும் வி

லக்காமென்றெண்ணியேபோலும், அப்பொருளைக்கவர்வித்துத்தாமேமுன்னிலையிற்கொடுத்தருளினுமெனக்கோடலுமாமென்க.

சுந்தரமூர்த்திகளது திவ்வியசரித்திரம்பாடிக்கொண்டுவருகின்றகிருபாவாகீசசிவம், மூர்த்திகளின்சிவசொரூபமகிமைகள்உள்ளிட்டுநோக்கும்படிஉரியசொற்களால், இதுவரையெத்தனையோ இடங்களில்அங்கங்கேயும்விளக்கியிருக்கவும், மூர்த்திகள் மலைநாட்டிற்சென்று திருவஞ்சைகளத்தினின்றும், வெள்ளானைமீதுகயிலாசத்துக்கெழுந்தருளுகின்றசரித்திரபூர்த்திகூறத்தொடங்கும்பொழுதும், "படியினீடுபத்திமுதலன்புநீரிற்பணைத்தோங்கி, வடிவுநம்பியாரூரர்செம்பொன்மேனிவனப்பாகக், கடியவெய்யவிருவினையின்களைகட்டெழுந்துகதிர்பரப்பி, முடிவிலாதசிவபோகமுதிர்ந்துமுறுகிவிளைந்ததால்" என்றுபாடியருளிற்று. இதில், நம்பியாகியஆலாலசுந்தரரது, பூமியிற்செல்லுதற்கிசைந்தெழுந்தபத்தியாகியவித்து, அன்பாகியநீரிற்பூரித்துஅப்பூமியில்வேரூன்றி ஓங்குதலால், அவ்வித்தின்முளைத்துஉருவாயெழுந்து, ஆரூரரென்னுந்திருப்பெயர்பெற்றுவிளங்குஞ் செம்பொன்மேனியாகியபயிரானது, இயல்பானேகடியவெய்யவினையாகியகளைகள்சிறிதுமின்றிவளர்ந்தெழுந்துகதிர்களைப்பரப்பித்தன்னிடத்தேஎன்றும்அழிவில்லாதநித்தியானந்தசிவபோகமுதிர்ந்துமுறுகி விளையப்பெற்றது என்னும்பொருள்விளக்கமாதல்காண்க." ஆகவே, மூர்த்திகளிடத்துப் பூமியில்வந்தபின்னும்முன்போலவே எப்பொழுதுந்நித்தியானந்த சிவபோகமேமுதிர்ந்துவிரிந்ததன்றி வேறுயாதுமில்லையென்பது தெளிவாயது.

பரமசிவவிருப்பத்தின்படியே, மூர்த்திகள், அப்பரமசிவனில் வேற்றுமையில்லாராதலால், தாமும்அவ்விருப்பங்கொண்டே, மாதர்பால், ஏனையர்மனம்போலவிரும்பிச்செல்கின்றபழக்கம்எப்பொழுதும்ஓரணுத்துணையுமில்லாத தமதுமனசைவலிந்துபோக்கி, அதுவேகாரணமாகவகித்துப்பூமியிற்சென்று, வாய்த் திருத்தொண்டின்மூலமாகப்பரமசிவபாரம்மியங்களைவிளக்கிச், சீவர்கள் அஃதுணர்ந்துசரியாதிவழிபாடுமேற்கொண்டுய்யும்பொருட்டுத்திருவுளங்கொண்டருளியசிவபக்திமேலீட்டினாலேயே, இப்பூமியில்வந்தவதரித்தருளினராதலால்இவர்பூமியில்வந்துஆரூரரென்னுந்திருப்பெ

யர்வகிக்கப்பெற்ற செம்பொன்மேனியாகியபயிருக்குப் பத்தியே வித்தாகஉருவகஞ்செய்தருளினாரிந்நூலாசிரியரென்க. இதனை, "படியினீடும்" என்னும அடைமொழியுமினிதுவிளக்கும். அப்பத்தியாகியவிதைவிதைக்கப்பெற்றநிலம்அப்பூமியேஎன்பதும்அதனாற்றெளிக.

இச்செம்பொன்மேனியானது,சீவர்க்குவினைசம்பந்தமாக வினைப்போகம்புசித்தற்குப்பிரமசிருட்டியால் வருங்கர்மசரீரம்போல்வதன்று, திருவருள்சம்பந்தமாக, அச்சீவர்களுக்குஅநுக்கிரகித்தற்பொருட்டேநேரேசிவசிருட்டியால்வந்ததேஎன்பது நன்குணரவே,பிறராற்களைகள்நீக்கப்பெறுகின்றவனைப்பயிர்கள் போலாகாது, தானே இயற்கையானே வினைகளாகியகளைகள்சிறிது மணுகப்பெறுதெழுந்துஎனவிளக்கினார்.

பயிர்என்றகற்கிசையக்கதிர்பரப்பிஎன்றருளி, அதனால்,செம்பொன்மயமானமேனியானது,எங்குமஒளிபரப்பிப்புறவிருளையும், அம்மேனிஅருள்மயமாதலால்அதுவேஎங்குந்திருவருட்பிரகாசம்பரப்பிஅகவிருளையும்,முற்றும்நீக்கியருளுகின்றது உண்மைப்பொருளுங்குறித்துணரவைத்தருளினார்.

மூர்த்திகள் கயிலாசத்துக்கெழுந்தருளுஞ்சமயஞ்சமீபித்துவிட்டதென்பார்; மேனியாகியபயிரானது எழுந்துகதிர்பரப்பிச்சிவபோகமுதிர்ந்துமுறுகிவிளைந்ததென்றருளினார். பயிரானதுவளர்ந்தெழுந்துகதிரீன்றுமுற்றிவிட்டால்,உடனேஅப்பயிரிட்டாரால், அவ்விடத்தினின்றுஞ்சகடங்களிலேற்றி மேலானதானத்தில்வைத்துமுன்னிலும் அதிகமாகப் பேணிக்கொள்ளப்படுவதுலகவழக்கம். இதுசர்வசாதாரணமானமற்றைப்பயிர்களே. அவைகள்நெல்முதலியனவேறுபயோகமாகவும், வைக்கோல்முதலியனவேறுபயோகமாகவும்வேறுபிரித்துக்கொள்ளப்படும். மூர்த்திகளதுசெம்பொன்மேனியாகிய பயிரானது, அசாதாரணமாகப் பரமசிவனால் செய்யப்பெற்று,முழுதுந்திருவருள்மயமேயானபயிராதலால். அப்பயிரும்விளைவும்வேறுபிரித்தற்கியலாது, இனி அப்பரமசிவனால் பூமியினின்றும்தமதுபட்டவாத்தனமாகியவெள்ளானைமீதெழுந்தருளுவித்து, மிகமேலான கயிலாசத்தானத்தில் தமதணிமையில் வைத்துப்பேணிக்கொள்ளப்பெறுதலையுணர்த்துவது இதன்கருத்தென்க,

மூர்த்திகளது சிவசொரூப உண்மையிலையை, ஆசிரியர், சரித்திர ஆரம்பஞ்செய்தமுதற்றிருவிருத்த முதலாக அங்கங்கேபற்பல திருவிருத்தங்களில் ஆழ்ந்து நோக்கிவிளங்கவைத்திருக்கவும், சரித்திரபூர்த்திசெய்யத்தொடங்கும்பொழுதும்மேற்காட்டிய திருவிருத்தத்தில் அவ்வுண்மையிலைபாவருக்குந்தெளிவாய்விளங்கவைத்தருளினர்; முன்பற்பலஇடங்களினுமுள்ளஉண்மையை ஆழ்ந்து நோக்காது, சரித்திரமுறைமாத்திரமே நோக்கிச்செல்வாரும், முடிவிலாவது, அவ்வுண்மைவெளிப்படநோக்கி, மூர்த்திகளதுசிவசொரூபமகிமைதெரிந்துள்ளபடி வழிபாடுசெய்துய்கவெனத் திருவுளங்கொண்டே, முடிந்ததாமுடித்தலென்னுமுத்தியாகச், சரித்திரசம்பந்த அத்தியாவசியமின்றியும்இவ்வாறு ஈற்றில் விளங்கவைத்தருளினரென்க.

இது, ஆரியவேதவக்தாவாகியபரமசிவன், அவ்வேதங்களிற்பற்பலஇடங்களிற்சிவபரத்துவவிளக்கஞ்செய்திருக்கவும் ஏனையர்க்குரைத்த உபசாரபரத்துவ நோக்கி மயங்காதுண்மை தெளியும்பொருட்டு, ஈற்றிலுள்ள அதர்வசிகாசமாப்தியில், சிவனொருவனே, யாவராலுந்தியானிக்கத்தக்கோன், அவனொருவனே யாவருக்குஞ்சிவஞ்செய்பவன் இதற்குமுன்உபசாரமாகப்பரத்துவங்கூறப்பெற்றஏனைய அரிபிரமேந்திராதிதேவசமூகமுழுதும் வர்ச்சிக்கப்படுவனவே அதர்வசிகைமுற்றிற்றுஎன்றுகூறியுள்ளதேபோலுமென்க. அச்சுருதிவசனம் ஶிவஏகோ த்⁴யேயஶ்ஶிவங்கரஸ்ஸர்வமந்யத் பரித்யஜ்ய ஸமாப்தாऽத²ர்வஶிகா

மூர்த்திகள்மேற்காட்டியபடி திருவாரூரினின்றும்மலைநாட்டுக்கெழுந்தருளுமார்க்கத்திலுள்ள அவிநாசியிற்சென்று, அங்குமுன்னமே, அவிநாசிலிங்கம் சுந்தரலிங்கம்என்னும்பெயருடைய இரண்டுபிராமணச்சிறுவர்கள், தடாகத்திற்சென்றுகுளித்தபொழுது சுந்தரலிங்கநாமச்சிறுவன்முதலையாலிறந்தமைதெரிந்து, அதனைத்தன்யோகாலங்களுக்குமுன்னிகழ்ந்ததாகவும்அத்தடாகமும் நீரின்றிவறந்துள்ளதாகவும், அங்குவந்துதிருப்பதிகம் முதற்பாசுரம்பாடும்பொழுது அத்தடாகத்தில்நீர்பெருகுதலும், இரண்டாவதில்முதலை அங்குவருதலும், மூன்றாவதில், அம்முதலைவயிற்றில்அச்சிறுவனுடல்சென்றவருடங்களின்வளர்ச்சியும்பெற்றுவருதலும், நான்

காவதில், இயமன் அச்சிறுவனுயிரை அவ்வுடலிற்புகுத்தலும், உடனே அம்முதலைகரையில்வந்து அச்சிறுவனை வெளிப்படக்கக்குதலும்நிகழப்பாடியருளிச், சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு சேரர்பிரான்றிருநகர்க்குச்சென்றருளினார். இதனாலுமிவர்நிர்ச்சலனராய்ச் சந்நிதிமாத்திரையேசிருஷ்டியாதிசெய்கின்றபரமசிவனேயென்பது தெளியப்பெறும்.

மூர்த்திகள் அத்திருநகரிலுள்ள திருவஞ்சைக்களமென்னுஞ் சிவாலயத்திற்சென்று திருப்பதிகம்பாடியருளி, இனி திருக்கயிலைக்கெழுந்தருளுந் திருவுளக்குறிப்புணர்த்திய அளவிலே, கயிலாசபதியானவர், அரிபிரமேந்திராதிதேவர்களை அனுப்பிவெள்ளானைமீதுவரவழைத்துக்கொண்டருளினார். இவர்நினைத்தபடியே அவர் செய்தலும் அவர்நினைத்தபடியே இவர்செய்தலுமாகிய இச்செயல்களைநோக்கியும், பரமசிவசுந்தரரிருவருஞ் சிறிதும் வேற்றுமையில்லா அபேதர்களேயென்பதுநன்குதெளியலாம். அபேதமூர்த்தியாதலாலன்றோ? அவர் திருவஞ்சைக்களத்திற் குறிப்பாலுணர்த்தியருளியஅக்கணமே. பரமசிவன் பிரமவிஷ்ணுவாதிசமஸ்ததேவர்களையும் சகலவரிசைகளுடன் அனுப்பி, அவர்கள், தம்மைப்போலநினைத்து வணங்கித்தமது பட்டவர்த்தனமாகிய யானைமீதெழுந்தருளுவித்துடன்சூழ்ந்து துதித்துச் சேவித்துக்கொண்டழைத்துவரும்படி ஆஞ்ஞாபித்தருளினாரென்பதும் உற்றுநோக்கியுண்மை தெளிக.

மூர்த்திகள், திருக்கயிலாசத்துக்கெழுந்தருளும்போது பாடியருளிய திப்பதிகமுதலாவது திருப்பாசுரம், "தானெனைமுன்படைத்தானதறிந்து தன்பொன்னடிக்கே, நானெனபாடலந்தோ நாயினேனைப்பொருட்படுத்து, வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானையருள்புரிந்து, ஊனுயிர்வேறுசெய்தானொடித்தான் மலையுத்தமனே" என்பதாம். இதில், 'தானெனைமுன்படைத்தான்" என்பதுபரமசிவனே, மூர்த்திகளைகண்ணுடியினின்றுந்தோற்றுவித்தருளினாரென்பதையும், கயிலையிலிருந்தஆலாலசுந்தரசொரூபமே, பூமியில்வந்து ஆரூரநாமங்கொண்ட சுந்தரரூபமென்பதையுமினிதுவிளக்கி, "அது அறிந்து தன்பொன்னடிக்கே நானென்னபாடல்" என்றபிற்றொடர்ச்சிகொண்டு, அங்ஙனந்தோற்றுவித்தது, பரப்பிரயோசனலோகோபகாரத்தின்பொருட் [illegible]

வாய்த்திருத்தொண்டைவிரும்பியே என்பதையுந் தெளிய விளக்குதல் காண்க.

மூர்த்திகள், பூமியில்வந்தருளிமணப்பருவமெய்தியபின் அஃதாவது(பதினாறு)வயசுக்குமேல்பாடத்தொடங்கிக்,கயிலாசத்துக்கெழுந்தருளிய(பதினெட்டு)வயசுக்குள்ளாகியஇந்தச்சிறுகாலத்துள்ளே,முப்பத்தேழாயிரம்திருப்பதிகம்சுமார்நான்குலக்ஷம் திருப்பாசுரம்பாடியிருந்தும், பரமசிவன், என்னைவாய்த்தொண்டுவிரும்பியே படைத்தது அறிந்தும், அவர்பொன்னடிக்கு என்னபாடலை பாடினேனென்று கூறித், தாம்பாடியதை அற்பமாய் நினைந்தார்' இதனால், இவர்சிவமகிமை முற்றுமியற்கையினுணர்ந்தமுற்றுணர்வினரென்பதுதெளிவாதல்காண்க. இதனை, "அந்தோ" என்றகுறிப்புமினிதுவிளக்கும். "பாடல்" என்னுஞ்சொல்முடிவின்றி அவாய்நிலையாய்நிற்றலால். இரண்டனுருபேற்றவழிப்,பாடினேன்என்னுஞ்சொற்கொண்டு முடிந்ததென்க.

"வான்"என்னுஞ்சொல், மேலுள்ள ஸ்வர்க்காதிலோகங்களெல்லாவற்றையுமுணர்த்தி,அந்தந்தலோகாதிபர்களையும்அவரவர்பரிவாரங்களையும்விளக்கும். "எதிர்கொள்ள" என்பது, அவ்விஷ்ணுவாதிசமஸ்ததேவர்களும்எதிர்வந்துவலஞ்செய்துவணங்கித்துதித்துச்சூழ்ந்துசேவித்துவரஎன்னும்பொருள்விளக்கஞ்செய்யும். இதனை, இரண்டாவதுதிருப்பாசுரத்தில்."வானைமதித்தமரர்வலஞ்செய்தெனையேறவைக்க,யானையருள்புரிந்தான்." என்றும் நான்காவதில், "அமரரெலாஞ்சூழவருள்புரிந்து" என்றும் ஐந்தாவதில் "விண்ணுலகத்தவர்கள்விரும்ப" என்றும் ஆறாவதில், "வானநன்னாடர்முன்னே, வெஞ்சினவானைதந்தான்" என்றும் ஏழாவதில், "அலர்கொண்டுமுன்வந்திறைஞ்ச"என்றும்எட்டாவது,"அரவொலியாகமங்களறிவாரறிதோத்திரங்கள், விரவியவேதவொலிவிண்ணெலாம்வந்தெதிர்ந்திசைப்ப, வரமலிவாணன்வந்துவழிதந்தெனக்கேறுவதோர், சிரமலியானை தந்தானொடித்தான்மலையுத்தமனே." என்றும் ஒன்பதாவது, "இந்திரன்மால்பிரமனெழிலார்மிகுதேவரெல்லாம், வந்தெதிர்கொள்ளவென்னைமத்தயானையருள்புரிந்து,.மந்திரமாமுனிவரிவனாரெனவெம்பெருமா,னந்தமாரூரனென்றுநொடித்தான்மலையுத்தமனே." என்றும் மூர்த்திகளே, அ

ப்பொழுதுபாடியருளியவாய்மைகளாலும்வெகுதெளிவாகநிச்சயித்துணரலாம்.

“சிரமலியானை” என்றது, இந்தஅயிராவணமென்னும் யானை, அயிராவதமுதலிய யானைகள்போலச் சாதாரணமன்றென்பதும், இரண்டாயிரங்கொம்புள்ளதென்பதும், இதுபரமசிவவிநாயகசுப்பிரமணியசிவமூர்த்திகள்மாத்திரமே ஏறிச்செலுத்தற்குரியபட்டவர்த்தனமென்பதும், பிரணவமே ரூபமானதென்பதும்முதலிய மகிமைகளைவிளக்குமென்க.

மூர்த்திகளது, சொரூபமகிமைஉள்ளபடிதெரிந்துபரமசிவனே எனக்கொண்டநிச்சயஞானமுள்ளவர்களாதலால், அரிபிரமேந்திராதிதேவரனைவரும், மூர்த்திகளைவலம்வந்துவணங்கிச் சூழ்ந்து அரஅர என்பனவாதிவேத சிவாகமவாக்கிய சிவஸ்தோத்திரங்களேசெய்துவந்தார்களென்னும்உண்மையைமேற்காட்டிய எட்டாவதுதிருப்பாசுரந்தெளியவிளக்குதல்காண்க.

முதலாவதுதிருப்பாசுரத்தில், “ஊனுயிர்வேறுசெய்தான்” என்றது, நான், ஊனடைந்தஉடம்பையுடைய உயிர்களாகியசீவவர்க்கத்தினன் அல்லேன். அதனின்வேறாகியசிவவர்க்கத்தவனே என்பதை. இப்பொழுதுயாவருந்தெளிவாய்ப்பிரத்தியக்ஷத்திற்காணச்செய்தான் என்பதாம். பிரத்தியக்ஷத்திற் காணச்செய்ததென்னையோவெனில்? சீவவர்க்கத்தில்கயிலையடையக்கூடியவர்களைச்சாதாரணமாக, விமானாதிகளிற்கணங்கள், வேறுசரீரிகளாக்கி அழைத்துச்செல்லுதலேயன்றிவேறில்லை மூர்த்திகள், பூமியில்மானுடசரீரியாய்வந்ததுநோக்கி அறிவிலார் அவரைச் சீவவர்க்கத்தினரென்று, நினைப்பினும், அந்நினைப்புநீங்கியுண்மைதெரிந்துய்தற்கே, பரமசிவன், தமதுதிருவெழுச்சிக்குரியசமஸ்தவரிசைகளுடன்சமஸ்ததேவரும், வேதசிவாகமவாக்கிய சிவஸ்துதிகளை செய்துகொண்டுவர, அசாதாரணமாகத் தாமேயல்லாதுபிறராலேறப்பெறாத. பிரணவரூபஅயிராவணயானைமீது, அதேசரீரியாய் எழுந்தருளிவரச்செய்தாராதலால். அதுவே அப்பொழுதுயாவருங்காணச்செய்தபிரத்தியக்ஷவிளக்கமென்க அதேசரீரத்துடன்மூர்த்திகள் கயிலைக்கெழுந்தருளினாரென்பதை, “களையாவுடலோடுசேரமானாரூரன், விளையாமதமாறுவெள்ளானைமேல்கொள்ள” என்னுந்திருவிசைப்பாச்சுருதியாலுந்தெளிக.

"ஊனுயிர்வேறுசெய்தான்" என்றதற்குஇவ்வாறன்றிஉடம்பினின்றும்உயிரைவேறுசெய்தானென்றுபிறர்கூறின்? அவ்வாறுசெய்ததுமில்லைநினைத்ததுமில்லையாதலால், அதுமுரணாமென்றொதுக்கி உண்மைகடைப்பிடித்துய்க. மூர்த்திகள், பூமியில்மானுடசரீரியாய் வந்ததுமன்றி அதற்கிசையச்சீவர்களைப்போலநடித்தமையும் நோக்கித், தம்மைச், சாமானியர்கள், சீவவர்க்கத்தினரென்று நினைத்துச் சிவத்துரோகிகளாகாதுய்கவெனத்திருவுள்ளங்கொண்டபெருங்கருணையினாலேயே, தாம்கயிலைக்கெழுந்தருளும் இந்தச்சமயம், தமதுண்மைவெளியிடவேண்டியதவசியமெனக்கருதி, "ஊனுயிர்வேறு செய்தான்." என்றருளினாரென்க.

இவர், சிவவர்க்கத்தவரேஎன்பதற்கு, இதுகாறுங்கூறியப்பிரமாணங்களேயன்றி, இவர், திருக்கயிலாசவாயில்வரையானைமேலெழுந்தருளித்திருமுன்வந்ததைப்பார்த்துக்கொண்டு அணிமையிலிருக்கின்றமந்திரமாமுனிவர்கள், தன்வீட்டினுள்வருவானொருவன் போல,வாயில்காப்போரும் யாதொருதடையுமின்றி, வருஞ்சமயங் கேட்டுத்தெரிந்துகொள்ளாமலும், அழைக்கப்பெறாமலும்,வந்தது நோக்கி, இங்குஇவ்வாறுவரும்பாத்தியதைபரமசிவனுக்கல்லதுபிறர்க்கில்லையேஎனக்கருதிப்பரமசிவனைவணங்கிச்சுவாமிகாள், இவர் யாரென்றுகேட்டதற்கு அப்பரமசிவனே; இவன்நமதுரிமைப்பாத்தியதையாவுமுள்ளவனாகியநமது ஆரூரன்என்றுகூறினதும் பெருஞ்சான்றாகும். அங்ஙனங்கூறியதை மேற்காட்டிய ஒன்பதாவது திருப்பாசுரத்தில், "மந்திரமாமுனிவரிவனாரென வெம்பெருமா,னந்தமாரூரனென்றான்" என்பதால்நன்குணர்க.

மூர்த்திகள், கயிலைக்குவந்தபின்னும், பரமசிவன், மந்திரமாமுனிவர்களுக்கு, இவரை ஆரூரன், என்னும் நாமத்தால் விளக்கினது கொண்டும், இவரது முன்னை ஆலாஹலசுந்தரநாமத்திருமேனியும், பூமியில்வந்தபின்னை 'ஆரூரநாமத்திருமேனியும் வேற்றுமையில்லாது திருவருள்மயமேயான அபேதமேஎன்பதுதெளிக.

மூர்த்திகள், திருவஞ்சைக்களத்தில், யானைமீதெழுந்தருளும் பொழுது. சேரர்பிரானும்உடன்வருகவெனத் திருவுளங்கொண்டதுணர்ந்து, அவருங்குதிரைமீதெழுந்தருளி மேற்சென்று, யானைமீதுவீற்றிருந்தருளுகின்றமூர்த்திகளைவலஞ்செய்துவணங்கி, அங்

சூச்சூழ்ந்துவருகின்ற தேவசேனைகளுக்கெல்லாந் தலைவராகச்சே
னாபதியாய்வரும்போது, பூமியில்அவரையேநோக்கிநின்ற அவர
துசேனாவீரரெல்லாரும் முறுகிவளர்ந்த அன்பின்மேலீட்டினால்,
தங்கள் சரீரங்களைவாளால்நீக்கிவீரசரீரிகளாய், மேற்சென்று சேர
ர்பிரானைச்சூழ்ந்தாரென்றுவிளங்கக்கூறிய ஆசிரியர், இதுகொ
ண்டே சுந்தரமூர்த்திகளின்பரிவாரங்களாகிய திருத்தொண்டர்கள்
பல்லாயிரவரும், மூர்த்திகளைப்போலமுன்னைச்சரீரிகளாகவேமூர்த்
திகளைமுன்போலச்சூழ்ந்துசென்றாரென்பதுகுறிப்பானுணர்க
வெனத்திருவுளங்கொண்டே விளக்காது சென்றனர். அன்றியும்
தூரத்திருந்தவரும்பின்வந்தநண்பருமாகியசேரர்பிரானையேபின்னே.
த்தழைத்துக்கொண்டாரானால்? எப்போதும் அணிமையர்களாய்
முன்வந்த திருவணுக்கத்திருத்தொண்டர்களுடனாகவே சென்றா
ரென்பதுசொல்லாமேஅமையுமாதலால், அவசியமின்மைநோக்கி
விளக்காதுசென்றனரென்றும்ஊகித்துணரலாம். இது, உய்த்துண
ரவைத்தலென்னுமுத்திபோலும்.

பெரியபுராணத்தில், திருக்கயிலாசத்திருமலைச்சிறப்புமுதலாக
வெள்ளானைச்சருக்கம்வரையிலும், சுந்தரமூர்த்திகளதுசிவசொரூ
பமகிமைகளைஎடுத்துக்காட்டுகின்ற உட்பொருள்விளக்கங்கள் பற்
பல. அவையெல்லாம் ஆங்காங்குள்ளபடிஎடுத்துக்காட்டிவிளக்கும்
வன்மை, தண்மைவாய்ந்துண்மையுணர்ந்த திண்மையறிவாளர்க்க
ன்றி அறிவிலாச்சிறியேனாலாவதன்றாதலினிம்மட்டிலமைந்தேன்.

இதுகாறுங்கூறியவாற்றால், சுந்தரமூர்த்திசுவாமிகள், பரமசி
வனேஎன்பதையும், அவர்மானுடவடிவினராய்வந்தது, பரமசிவன்
ஒவ்வோர்காலங்களிற் பக்தானுக்கிரகார்த்தமாக ஒவ்வோர்வடிவு
கொண்டுவருதல்போல, லோகோபகாரார்த்தமாகவேஎன்பதையு
ம், அங்ஙனம்வந்ததும், பரமசிவவருகைபோல அயோனிஜராகவே
வந்தாரென்பதையும், அவர்பரவையார் சங்கிலியாரைக்கூடியிருந்
தது, பரமசிவன்ஹைமவதியாகியகங்காதேவிபார்வதிதேவிசமேத
ராயிருத்தல்போல்வதன்றிச், சீவர்கள்போலச்சிற்றின்பநுகர்ச்சிக்
கன்றென்பதையும், அங்ஙனங்கூடியிருந்தபோது ஊடல் கூடலாதி
பற்பலவிஷயங்கள்நிகழக்காட்டியது, அபின்னபரமசிவசக்திகள் உ
லகெலாம்உய்யும்பொருட்டு, ஆண்பெண்ணுருக்கொண்டதற்கிசை
யஉலகர்க்குக்காட்டியபற்பலசரித்திரங்கள்போல்வனவேயன்றிச்,

சிவர்களிடத்துள்ளகர்மானுகுணச்செயல்கள்போல்வனவன்றென்பதையும், இவர் திருமேனி, பரமசிவரூபம்போலச்சச்சிதானந்தமயமேஎன்பதையும், அதனூர்முன் ஆசிரியர், சரித்திரபூர்த்திசெய்யத்தொடங்கும்போதும்முடிந்ததுமுடித்தலென்னுமுத்தியால், இவர்மேனியாகியபயிரானது, இயல்பானவெய்யவினைக்களைகட்டெழுந்துகதிர்பரப்பிசித்தியானந்தமாகியசிவபோகமேவிளைவித்ததென்றுகூறினூரென்பதையும், அதனையே இவர், கயிலையிற்சென்றுசிவசந்நிதியிற்புகுந்துபன்முறைவணங்கிஎழுந்துநின்றருளியதை "படியுநெஞ்சொடுபன்முறைபணிந்தெழும்பரம்பரையானந்த, வடிவுநின்றது" என்று மேலும்விளக்கினூரென்பதையும், இன்னுமிவைபோல்வனபலவற்றையும், மற்றையோருமுற்றநோக்கி, மூர்த்திகளை, நம்மைப்போலமானுடரிலொருவரென்றும், அவர்செயல்கள், நமதுகர்மானுகுணச்செயல்போல்வனவென்றுங் கருதி, அதற்கியைந்தனபேசிமீளாநரகுக்காளாவார்க்கிழுத்துக்கூறிஉண்மைவிளக்கி, மூர்த்திகளைப்பரமசிவனேஎன்றுள்ளபடிதெளிந்துவழிபாடுசெய்துசெய்வித்துய்யும்பேரருட்டுவேண்டிக்கொள்கின்றேன்.

யார்யாரெவ்வெச்செயல்களைச்செய்யினும், அவற்றை அவ்வச்செயல்வகைமாத்திரமேநோக்கி நிச்சயித்துண்மையுணர்தல்கூடாது. அவரவர்கருத்துவகையுள்ளிட்டுநோக்கியே நிச்சயித்துண்மையுணரலாமன்றிவேறில்லை. இதனை, "அரனடிக்கன்பர்செய்யும்பாவமுமறமதாகும், பரனடிக்கன்பிலாதார்புண்ணியம்பாவமாகும், வரமுடைத்தக்கன்செய்தமாவேள்விதீமையாகி, நரரினிற்பாலன்செய்தபாதகநன்மையாய்த்தே." என்றபிரபலசுருதியானுங்காண்க.

இதில், "அரனடிக்கன்பர்செய்யும்பாவமும்" என்ற அவ்வளவேநோக்கிஅவர்கள்பாவமுஞ்செய்வார்களென்றுகோடற்க. அவர்கள்செய்வது, செயல்வகைமாத்திரமேவெளிப்படநோக்குவோரால்பாவமாகக்கருதப்படினும். கருத்துவகையைஉள்விட்டுநோக்கிற்புண்ணியமேயாமென்றுகொள்க.

இதனுல். பாவம், புண்ணியமாதற்கும், புண்ணியம், பாவமாதற்குங்காரணம் அன்பும்அஃதின்மையுமேயாமென்றுகூறி; அதற்குநிதரிசனப்பிரமாணமாகச்சண்டேசுரர்செயலும், தக்கன்செயலுங்காட்டிவிளக்கியிருத்தலால், இப்பிரபலசுருதிப்பிரமாணம், எம்மத

த்தாலுமறுத்தற்கியலாதசம்மதமேயாகுமென்க. இனி நம்மதத்தினர் தம்மதம்வேறாகுமா? அமைக.

இப்பிரபலசுருதிப்பிரமாணங்கொண்டும் ஸ்ரீசுந்தரமூர்த்திகளது,செயல்வகையுங்கருத்துவகையும்நோக்கியுண்மைதெளிந்துய்வாருய்க. ஸ்ரீசுந்தரமூர்த்திகளது,சிவசொரூபநிலைமைநன்குணர்ந்துய்யும்பொருட்டு,இப்பெரியபுராணம், ஆங்காங்குப்பற்பல அற்புதவாக்கியங்களை,உள்ளிட்டு ஆழ்ந்துநோக்கிஉண்மைதெளியவைத்திருத்தல்போல, ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகள் சரித்திரங்களிலும், ஆங்காங்கு அவர்களின், சொரூபநிலைஉள்ளிட்டுநோக்கியுண்மைதெளியவைத்துள்ளஅற்புத வாக்கியங்கள்அளவில்லாதனவாம். மற்றைநாயன்மார்சரித்திரங்கள்முழுதுமே,அவ்வாறுஉள்ளிட்டுநோக்கி உண்மைதெளிதற்குரியவாக்கியங்கள்பற்பலவாம், அவையெல்லாம், அவ்வச்சரித்திரங்களினுண்மைவிரித்துரைத்தருளுமுத்தமசிலர்க்கன்றி, ஒன்றுக்கும் பற்றாதசிறியேனுரைப்பதெங்ஙனம்.

"விண்ணோர்தமக்குந்தெரிவருநின்மேன்மையெங்கேநானெங்கே, தண்ணார்துதியென்றிதுவுமொருகுற்றந்தாழைச்சமைந்ததா, லண்ணவன்புக்கெளியாயானவாவாற்செய்தேனாதலினு, லெல்லாம்பொறுத்தருள்வாயென்னுமிதுவென்றுணிபாமே." என்று பெரியார்பணித்தபடி, எல்லையின்றிவிரிந்துளத்தனையோவகைகளாய்ப்பரந்துள்ளசுந்தரசிவஅபாரமகிமாப்பிரவாகமெங்கே, நாயினுங்கடையனான பெரும்பேதையேன்அறிவெங்கே, என்றுகருதி,அதனைக்கூறத்தொடங்குதலொழிந்துவாளாவிராமல்,ஏதோ இதுவரையும்பிதற்றியகுழறுபடைகளால்,அபசாரம்வருமோவென்றஞ்சினேனாதலால்,எம்பெருமானே, உலகிற்சிலர்மூர்த்திகளதுசொரூபமகிமையுள்ளபடியுணர்ந்துவழிபாடுசெய்துய்வதொழிந்து, எம்மைப்போலச்சீவராகமதித்துவேண்டியவாறுபேசிநிரையத்துக்காளாகின்றார்களேஎன்றுபரிந்து,ஆசைமேலீட்

டினாலிவ்வளவுங்கூறினேன். இதனைப் பொறுத்தருளுகவென்று ஸ்ரீசாம்பசிவசரணாரவிந்தங்களைப்பணிந்துபிரார்த்தித்துக்கொண்டு, இந்நூலை அத்திருவடிகளிலேயே சமர்ப்பணஞ் செய்கின்றேன்.

என்றுமின்பம் பெருகுமியல்பினா
லொன்றுகாதலி னுள்ளமு மோங்கிட
மன்றுளாரடி யாரவர் வான்புகழ்
நின்றதெங்கு நிலவி யுலகெலாம்.

வையநீடுகமாமழைமன்னுக
மெய்விரும்பியவன்பர்விளங்குக
சைவநன்னெறிதான்றழைத்தோங்குக
தெய்வவெண்டிருநீறுசிறக்கவே.

திருச்சிற்றம்பலம்.

---

சிவசுந்தரசாயாரூபசிவமகிமாசங்கிரகம்

முற்றுப்பெற்றது.

## உபாசஞருநாணிக்கம்.

திருவருளும் பொருள்வளரச் சிவனருளு நூல்வளரத் தெளி யத்தேற்றுங், குருவருளுங் குணம்வளரக் கோனருளுங் கோல் வளரக் கோதில்சைவத், தருவருளும் பலன்வளரச் சகத்தருளு மாபதியே சைவவாய்மை, மருவருளுந் திருவுருவா வந்தருளு நாவலர்கோன் மலர்த்தாள்போற்றி. (க)

என்னைநிகர் பதகர்பிற ரில்லாதேன் பிழைகள்பொறுத் தேன் றுகொள்வார், பின்னெருவ ரில்லையெனும் பெருங்கருணையாலி னிய பேசியிர்த்துத், தன்னடியென் சென்னியுறத் தந்தருட்பா தோதகமுஞ் சார்நல்கி, யின்னுமருந் துணையாகி யிருந்தருளு நாவலர்கோ னிணைத்தாள்போற்றி. (உ)

பிள்ளையார் குமரரெனும் பெயரேபோ லுபபதங்கள் பெறு துநின்றே, யுள்ளையார் நாவலர்பே ரொருத்தனையே சிறுவருக்கு முணர்த்தநிற்போன், கள்ளையார் கடுக்கைமுடிக் கண்ணுதலைக் கண்ணுதலைக் கவினக்காட்டி, வள்ளையார் குழைபாகன் மகிமா ப்ர சங்கமுத மழைபெய் மேகம். (ந)

கற்றுணர்ந்தன் புற்றவர்க்கே காழியர்ா தியர்செயுப கா ரத் தின்மேற், சிற்றுணர்வின் பாலருமெய் தேர்கெனவே தாகம நூற் றெளிவைவெவ்வே, றுற்றபல நூலாக வுஞற்றிலெகு லெகு வாக வுணர்ந்துவாய்மை, முற்றுணர்வு முறநூல முதட்பருவ முணர்ந்தூட்டி முதஞ்செய்மாதா. (ச)

தேவர்குறள் புராணமியல் சித்திமுதற் சிவநூலின் சிதைவு நீக்கி, யாவருநன் குணர்தரமுற் றெச்சமுத லடையாள மெல் லாங்காட்டித், தாவருநல் லுணர்வுலகஞ் சைவநெறி நின்றுய் வான் றருமெய்த்தாதை, சேவருகோன் போற்றனக்கென் றொ ன்றுநயாவாதியனித் தியதிருத்தன். (ரு)

சைவமர பினிலரிய தவம்புரிந்து கந்தவே டந்தையாகத், தெய்வமே லொன்றதுமா சிவமேயென் றுலகமெலாந் தெளிந்து நின்றே, யுய்வதா கவுமேனை யுவலைமதப் பவநெறிக ளொன்று ருமே, ஞவதா கவுமகவாய் நல்லூரிற் பல்லுலகு நபப்பவந் தோன். (சு)

எமதிறைவ னெமதுறவ னெமதுதுணை யெமதுநகர் வெம துதாக, மெமதுபுக லெமதுவாழ் வெமதாவி யெமதுபொரு ளெ மதுதேக, மெமதுதவ மெமதுபல மெமதுநல மெமதுபுல மெம துயோக, மெமதுபுத்தி யெமதுசித்தி யெமதுபத்தி யெமதுமு த்தி யெமதுபோகம். (எ)

எமதிருண் முற் றிரிபவரு ளனுக்கிரண மெங்கும்விரித் தில ங்கும்பானு, வெமதுவினை யொப்புவர வெழிற்சரியா தியிற்சரி ப்பித் திதஞ்செயாசா, னெமதுமல பாகமுற வியைபோக மூட் டியொழித் திடுந்திரோதை, யெமதளிகொண் டருள்பதிக்கு மியன்ஞான பரமகுரு விணைத்தாள் போற்றி. (அ)

வேதசுரம் வழுவினஞர் விளையுமென வருள்சிவனை விளக் கும்பண்ணின், பேதமுமா பதிசிவநூல் பிறக்குதனைக் காதந் தோ பெட்டபெட்டாங், கோதிவயி றும்புநரை யொழித்தந் நூற் பண்ணடைவே புவந்துபாடி, நீதியாற் றமிழ்வேத நிகழ் வுறவெங் கணும்பரப்பு நிமலமூர்த்தி. (௯)

முன்னுலகெ லாமெனும்பொன் மொழியொன்றே விரிந்தடி யார் முதுநூலாய, தொன்னகராந் தில்லையிற்செய் தூச்செய லென் றனந்தமாத் துலங்குமென்றே, தன்னிகர்சை வப்பிரகா சவித்தியா சாலையினுந் தாபித்தங்க, ணன்னிலையே யபிவிருத்தி யாகிவரப் பெரும்பொருளு மமைத்தசீமான். (௧௦)

என்னாளும் பிறராலு மெவராலு மளப்பரிய வியற்சீராளன், பன்னாடும் பல்லுலகும் பகிரண்டங் களுமுவந்து பரவிவாழ்த்து, நன்னம ணறுமுக நாவலர்கோன் றிருப்பாத நளினப்போதாம், பொன்னரு முடிச்சென்னிப் புரவலர்சே வடிமுடியிற் புனைந்து வாழ்வாம். (௧௧)

உபாசனாதுநவணக்கம் முற்றிற்று.

# சோதந பத்திரம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| ௧ | ௧௭ | தொகைப் பொருள்சொ | தொகைப்பொருள்சொ |
| ௪ | ௧௧ | கௌஷி | கௌஷீ |
| ௪ | ௧௮ | நோக்கிபுண்மை | நோக்கியுண்மை |
| ௫ | ௪ | பதிபாகிய | பதியாகிய |
| ,, | ௩௩ | தாகவு | தாகவும் |
| ௬ | ௫ | வாய்நத | வாய்ந்த |
| ,, | ௨௬ | அகதிய | அகஸ்திய |
| ௭ | ௨௮ | வேததிமென் | வேதமென் |
| ௮ | ௨௯ | கண்ணிணார் | கண்ணிணார் |
| ௯ | ௨௬ | ஞார்ந்தசீலன | ஞார்ந்தசீலன் |
| ௧௨ | ௩ | தாதக்க | தாத்தக்க |
| ௧௪ | ௭ | தியகாயிரு | தியதாயிரு |
| ௧௬ | ௭ | பெரெச்ச | பெயரெச்ச |
| ,, | ௨௩ | சம்பந்த | சம்பந்த |
| ,, | ௨௫ | முனைபாடி | முனைப்பாடி |
| ௧௭ | ௧௧ | திருபாத | திருப்பாத |
| ௧௯ | யக | குலமரகிய | குலமாகிய |
| ௨௰ | ௯ | கரணஞ | கரணங் |
| ௨௧ | ௰ | நோக்கின் | ஞோக்கின் |
| ,, | ௧௭ | மாதாப்பிதா | மாதாபிதா |
| ௨௨ | ௪ | துபிரை | துயிரை |
| ,, | ௨௧ | தாகதெரி | தாகத்தெரி |
| ௨௪ | ௨௬ | முர்த்தி | மூர்த்தி |
| ௨௬ | ௨௯ | ராகிய | ராகிய |
| ௨௭ | ௧௯ | போருளே | பொருளே |
| ௨௮ | ௨௨ | தருளிணார் | சருளிணார் |
| ௨௯ | ௧௯ | சம்மந்த | சம்பந்த |
| ௩௰ | ௩௨ | மானடிக | மானடிக, |
| ௩௧ | ௨௫ | நிர்பக்ஷ | நிஷ்பக்ஷ |
| ,, | ௨௭ | நிர்பக்ஷ | நிஷ்பக்ஷ |

023 N14
121278

# சோதநபத்திரம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| ௩௩ | ௧௮ | னெனுந்திரு | னென்னுந்திரு |
| ௩௪ | ௩௪ | வள்க்து | வள்ர்ந்து |
| ௩௫ | ௧௪ | தன்மைம | தன்மைம, |
| ,, | ௧௯ | செப்க்க் | செய்க்க |
| ௩௬ | ௧ | சங்கிக்கம் | சங்கிரகம் |
| ௩௬ | ௨௫ | செய்கபின் | செய்தபின் |
| ௩௮ | ௨ | பாதற்கே | பாதர்க்கே |
| ௩௯ | ௨ | முர்த்தி | மூர்த்தி |
| ,, | ௯ | தாக்கினு | தாகிக்கினு |
| ௪௰ | ௧௯ | இன்மா | இன்பமா |
| ௪௧ | ௧௫ | தள்ளியி | தள்ளிவி |
| ௪௩ | ௭ | தம்மைத் | தம்மை |
| ௪௫ | ௧௫ | எங்கும | எங்கும் |
| ௪௬ | ௨௨ | ஜெய | ஜெய |
| ௪௯ | ௨௩ | வேறில்லில் | வேறில்லை. |
| ,, | ௨௮ | ல்லாது | ல்லது |
| ,, | ,, | பெருத. | பெருத |
| ,, | ௩௰ | ராதலால். | ராதலால் |
| ,, | ௩௧ | மென்க | மென்க. |
| ௫௰ | [illegible]௯ | ஆரூரன். | ஆரூரன் |
| ,, | ௩[illegible] | பொழுது. | பொழுது |
| ௫௧ | ௪ | வீட்டினால். | வீட்டினால் |
| ௫௩ | ௨௩ | பெரும் | பெரும் |